ISSN 1391-9504

# விஜய்

Vijey විජයි

02.04.2014 - மலர் 11, இதழ் 05




மலேஷிய விமானம்; தொடரும் ஊகங்கள்



ஏப்ரல் – 1 முட்டாள்கள் தினம்

விண்வெளியில் பெருகிவரும் குப்பைகள்

மீண்டும் தலைதூக்கும் தொழுநோய்





## புராதன காவற்கல் சிற்பங்கள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01) இங்கு எத்தனை பட்டங்கள் உள்ளன?

..................................

02) அளவில் பெரிய பட்டத்தில் காணப்படும் நிறங்கள் யாவை?


1. நீலம், சிவப்பு, வெள்ளை, பச்சை, செம்மஞ்சள்
2. சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், நீலம்
3. சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம்

03) எந்தெந்த வரிசைகளில் ஒரே எண்ணிக்கையிலான பட்டங்கள் உள்ளன?

1. முதலாம் வரிசையிலும் மூன்றாம் வரிசையிலும்
2. முதலாம் வரிசையில்
3. இரண்டாம் வரிசையில்

01) இந்த பஸ் வண்டியின் பெயர்ப்பலகையில் சில எழுத்துக்கள் அழிந்துள்ளன. அவற்றைப் பூரணப்படுத்தினால் அமைவது;

1. SCHOOL BUS
2. SCHOLAR BUS
3. SCHL US




02) இந்த பஸ் வண்டி குறிக்கும் சேவை யாது?

1. பயணிகள் போக்குவரத்துச் சேவை
2. பாடசாலை போக்குவரத்துச் சேவை
3. சுற்றுலா சேவை

03) வண்டியை செலுத்துபவர் யார்?

1. நடத்துனர் 2. மாலுமி 3. சாரதி




01) இந்தப் படம் குறிக்கும் வேளை யாது?

1. இரவு வேளை 2. காலை வேளை
3. மாலை வேளை


02) கிழக்கில் உதித்து மேற்கில் மறைபவன் யார்?

1. சூரியன் 2. சந்திரன் 3. நட்சத்திரம்

03) இந்தத் தம்பி என்ன செய்கின்றார்?

1. நித்திரைக்குச் செல்கின்றார்
2. தியானம் செய்கின்றார்
3. நித்திரை விட்டெழும்புகின்றார்





01) இங்கு எத்தனை பூக்கள் உள்ளன?

..................................

02) இந்தப் படத்தில் இருக்கும் விலங்கு யாது?

1. நாய்க்குட்டி
2. பூனைக்குட்டி
3. மான்குட்டி

03) இரண்டு இலைகளுடன் காணப்படும் பூக்களுக்கு சிவப்பு நிறம் தீட்டுக.

04) நாய் குரைக்கும் என்பது போல;

பூனை - ..................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

# விண்வெளியில் பிரச்சினை தரும் குப்பைகள்!

விண்வெளியில் காணப்படும் 'விண்வெளிக் குப்பைகள்' தற்போது பெரும் அச்சுறுத்தலாகியுள்ளன என்று கூறினால் நீங்கள் நம்புவீர்களா?



விண்வெளியில் மிதக்கும் குப்பைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவை புவியிலிருந்து ஏவப்படும் செய்மதிகளின்மீது மோதி அவற்றின் செயற்பாடுகளை பாதித்துக்கொண்டிருக்கின்றன. இதனால், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவொன்று பூமியில் இருந்தவாறே, இந்த விண்வெளிக் குப்பைகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் வானியல் பௌதிக விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளரான மெத்தியூ கொலஸ், இதுவொரு வெற்றிகரமான நிகழ்ச்சித் திட்டம் என்றும் இது தொடர்பில் சுமார் பத்து ஆண்டுகளுக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



விண்வெளி முழுவதும் திருகு ஆணிகள், போத்தல்கள், ரொக்கெட் துண்டுகள் என சுமார் 3 லட்சம் வரையிலான விண்வெளிக் குப்பைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவை விண்வெளியில் வேகமாக சுற்றிவருகின்றன. அந்த வகையில், மௌன்ட் ஸ்ட்ரோம்லோ விண்வெளி நிலையத்தில் இருந்தவாறு இந்த விண்வெளிக் குப்பைகளை கண்காணிப்பதற்கென அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் குழுவினர் தற்போது நாஸா நிறுவனத் துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்கென அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் 20 மில்லியன் டொலர்களும் தனியார் நிறுவனம் ஒன்றினால் 40 மில்லியன் டொலர் களும் ஆய்வுக் குழுவினருக்கு வழங்கப்பட்டுள் ளன. இதன்மூலம் இந்த குப்பைகளை அகற் றுவதற்கென சிறந்த தரத்தி லான லேசர் கதிரினைத் தயாரிப்பது தொடர்பிலான ஆய்வு நிலையம் ஒன்றை அமைப்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.




வீசேட தபால் மூல புலமைப் பரீட்சை வழிகாட்டி
இலகு நுட்பங்களுடன் கற்கக் கூடிய எதிர்பாபர்கை வினாப்பத்திரங்கள் விற்பனைக்கு உண்டு.
தொகுதி 1-3 வரை ரூ.300 ம், தொகுதி 4-6 வரை ரூ.300 ம் மட்டுமே
தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
இச்சலுகை மே மாதம் 10ம் திகதி வரை மட்டுமே
காசுக்கட்டளை (M.O) or வங்கியினூடாக செலுத்தியும் பெறமுடியும்
விபரங்களுக்கு: 071-7628238 / 077-8881054

தலைமைத்துவம்-காலமுகாமைத்துவம்
பயிற்சி நெறி - 2014
MCHS SRI LANKA Youth
காலம்: 06.04.2014
இடம்: இளைஞர் பயிற்சி நிலையம், சாய்ந்தமருது.
நேரம்: மு.ப. 08:30 - பி.ப 05:30
பாடசாலை மாணவ-மாணவிகள், இளைஞர் கழக உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள், பொது அமைப்பு உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் இப்பயிற்சி நெறியில், பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களால் பயிற்சி நெறிகள் நடத்தப்படும்.
பங்குபற்றுவோருக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தினால் சான்றிதழ் வழங்கப்படும்.
பிரதம அதிதி:
கௌரவ.விமலவீர திசாநாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சர்.
தலைமை:
ஏ.எல்.எம்.நிசான், சகவாழ்வு பிரதி அமைச்சர், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்.
பிரதான அனுசரணை: SSL SMART of Sri Lanka Organization
ஊடக அனுசரணை: விஜய்

ஆங்கிலம் கற்க வேண்டுமா ? இதோ.....
தபால் மூல ஆங்கில கல்வி
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்குமான விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH - DIPLOMA IN ENGLISH தபால் மூல பாடநெறி
பாடநெறியை தொடரும் உங்களுக்கு கடிதங்கள் எழுதுவது எப்படி என்ற பயிற்சி புத்தகம் ஒன்று அழகிய T.SHIRT ஒன்று என்பன இலவசமாக வழங்கப்படும்
எமது DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy) களுக்கு செல்லு படியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS பண்ணவும்.
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகள் கசக்கும்



ஒருநாள் சாந்தன் என்ற சிறுவன் தனது வீட்டிற்கு முன்னால் உள்ளே வேப்பமரத்தின் கீழே உட்கார்ந்திருந்தான். அவன் சோகமாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட வேப்பமரம் அவனிடம், "தம்பி ஏன் சோகமாயிருக்கிறாய்?" என்று கேட்டது. இதைக்கேட்ட சாந்தன், வேப்பமரத்திடம், "என் அப்பாவும் அம்மாவும் என்னை எப்போதும் 'படி படி' என்று படாதபாடாய் படுத்துகின்றார்கள். அது மட்டுமின்றி, கண்டபடி என்னை ஊர் சுத்தக் கூடாது என்றும் சொல்கிறார்கள். நான் இந்த வயதில் நண்பர்களுடன் கூடிவிளையாடி சந்தோஷமாக இல்லாமல், எப்போது சந்தோஷமாக இருப்பது? என் நண்பர்கள் எல்லோரும் எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறார்கள் தெரியுமா? எனக்குத்தான் எந்த சுதந்திரமும் இல்லை!" என்று கலங்கியபடி கூறினான்.

இதைக் கேட்ட வேப்பமரம், "ஓ...இதுதான் உன் பிரச்சினையா?" நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன் கேள் நான் வேப்பமரம் தானே...?" என்றது.

"ஆம்" என்றான் சாந்தன்.

"என் பாகங்கள் எல்லாம் எப்படி இருக்கும்?" என்றது வேப்பமரம்.

"கசப்பாக இருக்கும்!" என்றான் சாந்தன்.

"சரி. என் உறுப்புக்கள் கசப்பாக இருக்கும். ஆனால், என்னை மருந்தாகப் பயன்படுத்திப் பலர் சாப்பிடுகிறார்கள் அல்லவா? அதையே தொடர்ந்து உண்டு வந்தால் நான் நோய்களைக் குணப்படுத்திவிடுவேன். நான் கசப்பாக இருந்தாலும் என்னால் பலன்தான் கிடைக்குமே தவிர, தீமை ஒன்றும் ஏற்படாது. அதுபோலத்தான் பெற்றோர்கள் உனக்குச் சொல்லும் அறிவுரைகள். உனக்குப் பிடிக்காமல் இருக்கும். ஆனால், அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி வந்தால் நீ வாழ்வில் முன்னேறலாம். உன் பெற்றோர்கள் உன்னைக் கண்டபடி ஊர் சுற்றாமல் கவனமாய் படிக்கச் சொல்வது உன் முன்னேற்றத்திற்காகத் தானே" என்று கூறியது வேப்பமரம். இதைக்கேட்ட சாந்தன், வேப்பமரம் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. உண்மைகள் கசப்பாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்தான். புத்தெளிவுடன் வேப்பமரத்திற்கு நன்றி கூறிவிட்டு, பாடங்களைப் படிப்பதற்காக வீடு நோக்கிச் சென்றான்.

# அகங்காரம்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. அதற்கு தன்னுடைய பலத்தின்மீது மிகுந்த பெருமை. தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற நினைப்பில் அந்த காட்டில் வாழும் சிறிய மிருகங்களை எல்லாம் பாடாத பாடாய்ப்படுத்தியது. இதனால், சின்ன மிருகங்கள் அனைத்தும் கடவுளிடம் அழுது புலம்பின. உடனே, கடவுள் ஒரு சிறிய நுளம்பைக் கொண்டு சிங்கத்திற்குப் பாடம் புகட்ட விரும்பினார்.

ஒருநாள் சிங்கம் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அந்தவேளை அந்தப் பக்கமாக நுளம்பு ஒன்று வந்தது. முதலில் தன் காதருகே வந்து ரீங்காரமிட்ட நுளம்பைப் பற்றி சிங்கம் அலட்சியமாக நினைத்தது. திரும்பத் திரும்ப நுளம்பு தொந்தரவு கொடுக்கவே சிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது.

"யாரவன் எனக்குத் தொந்தரவு கொடுப்பது?" என்று உருமிக்கொண்டே கோபத்துடன் சிங்கம் எழுந்தது.



நுளம்பு கலகலவென நகைத்து, "சிங்க ராஜாவே என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான்தான் நுளம்பு" என்றது.

"நீ யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போ. என்னிடம் வந்து ஏன் தொந்தரவு செய்கிறாய்?" என்று சிங்கம் கேட்டது.

"நான் உங்களிடம் சண்டை போட வந்திருக்கிறேன். முடியுமானால், என்னிடம் சண்டையிட்டு என்னைத் தோல்வியுறச் செய்யுங்கள் பார்க்கலாம்" என நுளம்பு சவால் விட்டது.

"உனக்கு என்ன திமிர்? அற்ப ஜந்துவாகிய நீ என்னிடமா சண்டைக்கு வந்திருக்கிறாய்? நான் மூச்சு விட்டால்கூட நீ நிர்மூலமாகிவிடுவாயே" என்று கூறியவாறே சிங்கம் தன் முன்னங்கால்களை நுளம்பிருந்த பக்கமாக வீசியது.

நுளம்போ மிகவும் சுலபமாகத் தப்பித்து அப்பால் பறந்து சென்றது. நுளம்பு தொலைந்தது என்று எண்ணிய சிங்கம் நிம்மதியாகப் படுத்தது. ஆனால், நுளம்பு மீண்டும் வந்து சிங்கத்திற்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. சிங்கத்திற்குக் கோபம் தாள முடியவில்லை. ஆகவே, மறுபடியும் நுளம்பை விரட்டியது. கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு சிறிய உருவமாக இருந்த நுளம்பு மிகவும் எளிதாக சிங்கத்தை ஏமாற்றி அதனிடமிருந்து தப்பித்துக்கொண்டது. இவ்வாறே, நெடுநேரம் சிங்கமும், நுளம்பும் போராடின. சிறிய அந்த நுளம்பை சிங்கத்தால் என்ன செய்ய முடியும்? அதை விரட்ட, விரட்ட திரும்பத் திரும்ப வந்து சிங்கத்திற்குத் தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தது. நுளம்பை ஒன்றும் செய்ய முடியாமல் சிங்கம் சோர்ந்துவிட்டது. ஓய்ந்துபோய் கீழே படுத்துக்கொண்டது.

நுளம்பு கைகொட்டி ஏளனச் சிரிப்புச் சிரித்தது. "மிருகங்களுக்கே அரசன் என்று சொல்லிக்கொள்ளும் உம்முடைய பலம் என்னிடம் பலிக்கவில்லை பார்த்தீரா? உம்மைவிட நான்தான் பலசாலி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, நான்தான் இந்தக் காட்டிற்கு அரசன்" என்று வெற்றி முழக்கம் இட்டது. சிங்கம் வெட்கித் தலை குனிந்து நின்றது.

# நன்றிக்கடன்

உணவு தேடிச் சுற்றித் திரிந்த காகம் ஒன்று இரை எதுவும் கிடைக்காமல் சோர்ந்து போய் தோட்டத்தில் போடப்பட்டிருந்த குடிசை மீது அமர்ந்தது. சோகமாய் "கா...கா...." என கரைந்தது.

உடனே, அந்த வீட்டுக்குள் இருந்து ஒரு பெண் வந்தாள். அவள் இடுப்பில் ஒரு அழகிய குழந்தை இருந்தது. அவள் கூரைமீது கொஞ்சம் சோற்றைப் போட்டாள். தனக்கு உணவிட்டவர்களைக் கூர்ந்து பார்த்துக்கொண்ட காக்கை, தனக்குப் போடப்பட்ட உணவை வயிறு முட்டச் சாப்பிட்டது. தன் குஞ்சுக்கும் வாய் நிறைய உணவை எடுத்துக் கொண்டு பறந்தது.

அதன்பின் தினமும் அது அங்கு வந்தது. அந்த அம்மாவும் அதற்கு வகை வகையான உணவுகளைப் போட்டார். காகம் கரைந்து தனது சுற்றத்தாரையும் அழைத்து கூட்டுச் சேர்ந்து சாப்பிட்டு வந்தது. அந்த வீட்டில் தினமும் தங்களுக்கு ஏதாவது கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவற்றுக்கு உறுதியாகிவிட்டது.

ஒருமுறை அவை உணவுக்காக அந்த வீட்டுக்கூரை மீது வந்தமர்ந்தபோது நாக பாம்பு ஒன்று கூரை கழியிலிருந்து வீட்டிற்குள் புக முயற்சிப்பதைக் கண்டன. "இந்தப் பாம்பு வீட்டிற்குள் போக முயற்சிக்கிறது. வீட்டில் குழந்தை உள்ளது. உடனே வீட்டில் உள்ளவர்களை எச்சரிக்கவேண்டும். அவர்கள் வரும் வரை பாம்பை மேற்கொண்டு நகரவிடக் கூடாது. கவனமாய் இதை செய்ய வேண்டும். ஆம், அவர்களைக் காப்பதும், எச்சரிப்பதும் நம் கடமை! நமக்கு உணவிட்டவருக்கு நாம் நம் நன்றியைக் காட்ட வேண்டிய தருணம் இது" என நினைத்த காகங்கள், ஒரு நிமிடத்தில் கூடிப் பேசி, பீதி நிறைந்த குரலில் ஒட்டுமொத்தமாய் கத்திக்கொண்டு சிறகைப் படபடவென அடித்தன. சுற்றிச் சுற்றி வந்து பறந்தன.



"இது என்ன? இந்த காக்கைகளுக்கு இன்று என்ன வந்தது? போட்டதைச் சத்தமில்லாமல் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுமே? இன்று ஏன் இப்படி அலறிக்கொண்டு வட்டமிடுகின்றன? சோற்றைப் போட்ட பின்பும் சத்தம் அடங்கவில்லையே? இந்த காக்கைகளுக்கு நாம் ரொம்பவும் இடம் கொடுத்துவிட்டோமோ? குழந்தை வேறு தூங்குகிறது. இவை போடும் இரைச்சலில் குழந்தை விழித்துக் கொண்டால்..." என்று எண்ணியபடி எரிச்சலோடு வெளியே வந்து கூரையைப் பார்த்தாள் அந்தப் பெண்.

கூரைமீது பாம்பு ஒன்று படம் எடுத்துச் சீறிக்கொண்டு நிற்பதைக் கண்டாள், அதை காக்கைக் கூட்டம் சுற்றி வந்து மேலே நகர விடாமல் தடை செய்வதையும் கண்டாள். பயமும், நன்றி உணர்வும் கொண்டவளாய் உடனே தனது கணவரை அழைத்து பாம்பை அடிக்கும்படி கூறிவிட்டு நன்றியோடு காக்கைக் கூட்டத்தைப் பார்த்துப் புன்னகை செய்தாள். "வாயில்லா ஜீவன்களான காக்கைகளும்கூட நன்றிக்கடன் செலுத்துகின்றனவே" என்று அதிசயப்பட்டனர் அந்தப் பெண்ணும் அவளின் கணவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MH 370 காணாமல் போன மலேசிய விமானம் கடலில் வீழ்ந்ததாக அறிவிப்பு




காணாமல் போன விமானத்தையொத்த விமானமொன்றை மெனிலா நகர் பாடசாலை வளவொன்றில் வர்ணப்பூச்சுக்கள் கொண்டு முப்பரிமாண வடிவமைப்பில் அமைப்பதைப் படத்தில் காணலாம்.

கடந்த சில வாரங்களாக உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்த மலேசிய பயணிகள் விமானம், கடற்பரப்பில் விழுந்துவிட்டதாகவும் அதில் பயணித்தவர்கள் அனைவரும் இறந்துவிட்டனர் என்றும் மலேசிய பிரதமர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். 'செய்மதி' தகவல்களை அடிப்படையாக வைத்தே தாம் இந்த முடிவை அறிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். போயிங் 777 ரகத்தைச் சேர்ந்த MH 370 என்ற இந்த விமானம், 239 பேருடன் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி வான்பரப்பில் பயணித்துக்கொண்டிருந்த வேளையிலேயே மாயமாய் மறைந்திருந்தது.

பொதுவாக, வானத்தில் பறந்து கொண்டிருக்கின்ற விமானமொன்று, குறித்த நேரத்தில்- குறித்த விமான நிலையத்தில் தரை தொடாவிட்டால், ஒன்றில் அந்த விமானம் விபத்திற்குள்ளாகியிருக்க வேண்டும்; இல்லையேல் இயந்திரக் கோளாறு காரணமாக விமானியால் வசதியான வேறு இடத்தில் அவசரமாக தரை தொட்டிருக்க வேண்டும். அப்படியும் இல்லையேல் விமானம் கடத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், MH 370 மலேசிய விமானமானது, விபத்திற்குள்ளாகியதாக மலேசிய அரசால் உறுதிப்படுத்தப்பட்டாலும் இதுவரை விமானத்தின் சிதைந்த பாகங்கள் எவையும் கண்டெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



விமான கட்டுப்பாட்டு அறை

## ஊகங்கள்

மலேசியாவின் கோலாலம்பூர் நகரிலிருந்து சீனாவின் பீஜிங் விமான நிலையம் நோக்கிப் பறந்து கொண்டிருக்கையிலேயே, இந்த விமானம் மாயமாக மறைந்துள்ளது. மார்ச் 9 ஆம் திகதியன்று 'ரேடார்' திரையிலிருந்து திடீரென இந்த விமானம் மறைந்ததால், சீனாவின் தென் கடற்பரப்பில் விமானம் விழுந்திருக்கக் கூடும் என்ற ஊகத்தில், அப்பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், எந்தவோர் ஆதாரங்களும் கிடைத்திருக்கவில்லை.



இத்தகைய சூழ்நிலையில், இது தொடர்பாக மேலும் சில ஊகங்களும் தெரிவிக்கப்பட்டு வந்தன. அதாவது, மேற்படி விமானமானது, வேற்றுக்கிரக வாசிகளால் கடத்திச் செல்லப்பட்டிருக்குமா? என்றவோர் ஊகம் ஒருபுறமும், கப்பல்களும் விமானங்களும் மாயமாய் மறைந்து போகின்ற 'பேர்மியுடா' முக்கோணப்பகுதியில் மாயமாகியிருக்குமா? என்று இன்னோர் ஊகமும் தெரிவிக்கப்பட்டு வந்தன. ஆனால், இவை எவையும் விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தக்கூடிய காரணிகள் அல்ல.

விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற ஊகத்தில் மலேசிய கடற்பரப்பினை அண்டிய சிறிய தீவுப்பகுதிகளில், 25 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஒன்றிணைந்து தேடுதல் பணிகளை மேற்கொண்டிருந்தன.

இன்னொரு தகவலின்படி, மேற்படி விமானமானது 'ரேடார்' கண்காணிப்புத் திரையில் விழாமல் இருப்பதற்காக வேறொரு விமானத்துடன் மறைந்தவாறு பயணித்து மாலைதீவுப் பகுதியை நோக்கிச் சென்றிருக்கலாம் என்றும் கூறப்பட்டது.




விமானத்தை எதிர்பார்க்கும் ஆவலில் எழுதப்பட்ட பதாகையொன்று.

## சீனாவின் சதியா?

உலகிலேயே மிகவும் மலிவு விலையிலான விமானக் கட்டணத்தைக் கொண்ட விமான சேவையாக மலேசிய விமான சேவையே கருதப்படுகின்றது. எனவே, அதன் தனித்துவத்தை அகற்றுவதற்காக குறித்த பிராந்திய விமான சேவையை தமது ஏகபோக தனியுரிமை ஆக்கிவிடும் நோக்கில், சீனாதான் இவ் விமானத்தைக் கடத்தியிருக்கக்கூடும் என்றும் கூறப்பட்டது. அதாவது, இந்த சம்பவத்தின் காரணமாக மலேசிய விமானத்தில் பயணிப்பதற்கு பயணிகள் தயக்கம் காட்டுவர். அதனால், சீன விமான சேவையை அவர்கள் நாடக்கூடும். இதன்மூலம் சீன விமான சேவையின் தேவை அதிகரிக்கக்கூடும். இதுதான் சீனாவின் திட்டம் என்ற கோணத்திலும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.




## நடைமுறைகள்

விமானமொன்று பறக்க ஆரம்பித்தவுடன் நடைபெறும் சில கண்காணிப்பு நடைமுறைகள் உள்ளன. அதாவது, 'ரேடார்' கண்காணிப்பின்மூலமாக விமானத்தின் நகர்வுகளைக் கண்காணிக்கும் விதமாக, தரையில் உள்ள விமானக் கட்டுப்பாட்டுத் தளத்துடன் தொடர்பு பேணப்படும். வானலை தகவல்கள் மற்றும் செய்மதித் தகவல்களினூடாக இந்தத் தகவல்கள் பெறப்படும்.

இவ்வாறான செய்மதிப் படங்களின் அடிப்படையில் இலங்கையின் கீழ்ப்புறம் இந்து சமுத்திரத்தில் இரண்டு பாரிய சிதைவுப் பகுதிகள் அவதானிக்கப்பட்டதாகவும் இவை காணாமல் போன விமானத்தின் சிதைவுகளாக இருக்கலாம் என்றும் அவுஸ்திரேலிய பிரதமர் புதிய தகவலொன்றை தெரிவித்திருந்தார். ஆனால், இவையும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இத்தகைய நிலையிலேயே, இந்த விமானம் கடலில் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியிருப்பதாக மலேசியா அறிவித்துள்ளது. எனினும், கண்களுக்கு புலப்படக்கூடிய உறுதியான ஆதாரங்கள் முன்வைக்கப்படும் வரையில் மேற்படி விமானம் தொடர்பாக தொடர்ந்தும் புதுப்புது ஊகங்கள் வெளிவருவது தொடரவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனம்
# வாழ்வில் முன்



## வளங்கள் பொருந்திய எமது நாடு

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், எமது நாடு இயற்கையான வளங்கள் பொருந்திய அழகிய நாடாகும். சுத்தமான நீர், சுத்தமான காற்று, பிரகாசமான சூரிய ஒளி, வளமான மண், ஆரோக்கியமான பயிர்ச்செய்கை, சுகமான காலநிலை என்பன எமக்கு இயற்கையாகவே கிடைத்துள்ளன. உலகில் பெரும்பாலான நாடுகளில் சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. குடிநீரை பணம் கொடுத்து கொள்வனவு செய்ய வேண்டிய நிலை சில நாடுகளில் ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் கடல்நீரை சுத்தப்படுத்தி குடிநீரைப் பெறுகின்றன. இதற்காக அதிகளவு பணத்தை செலவுசெய்யவேண்டியுள்ளது. சில நாடுகளில் நீர் இருந்தாலும் அவை அருந்துவதற்கு உகந்ததாக இல்லாமல், அசுத்த மான கழிவு நீராகவே உள்ளது. அதேபோன்று வேறு பல நாடுகளி லும் நீர், காற்று, சூரிய ஒளி தொடர்பாக பிரச்சினைகள் இருந்தாலும் மத்திய கிழக்கு நாடுகளே கடுமையான காலநிலைகளை எதிர்கொண் டுள்ளன. ஆனால், எமது நாட்டில் வருடம் முழுவதும் சூரிய ஒளி மிக இதமாகவே கிடைக்கின்றது.

சுகமான காலநிலை கொண்ட எமது அழகிய நாட்டில் வருடம் முழு வதும் புத்தம் புதிய காய்கறிகள், பழங்கள் எமக்கு கிடைக்கின்றன. சுற்றுப்புறச் சூழலில் அசுத்தமான வாயுக்கள் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. வெள்ள அனர்த்தம், சூறாவளி, அபாயம், மண் சரிவு அனர்த்தங்கள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், எமது நாட்டில் வெகு குறைவாகும். இவ்வாறான சூழலையும் சிறந்த பெறுமதியான வளத்தையும் கொண்ட எமது நாடு இன்னும் வறிய நாடாகவே உள்ளது.

## பெறுமதியினை உணர்ந்து கொள்வோம்!

எமது நாட்டில் உள்ள வளங்களின் முக்கியத்துவத்தினையும், பெறுமதியினையும் நாம் உணராததினாலேயே எமது நாடு இன்னும் வறிய நாடாக உள்ளது. வளங்களின் முக்கியத்துவம் சரியான வகையில் உணரப்படுமாயின், அவற்றைப் பாதுகாக்க நாம் எப்பொழுதுமே முயற்சி செய்வோம்.

## குடிநீர்



குடிநீரின் முக்கியத்துவத்தினை உணர்ந்து சிக்கனமாகப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கு வழங்கப்படும் பெறுமதியினை அல்லது முக்கியத்துவத்தினை வீட்டின் கிணறுகளுக்கும், பாடசாலைகளின் நீர் கிடைக்கப்பெறும் இடங்களுக்கும் வழங்கி நீரைப் பாதுகாப்போமாயின், அது எதிர்கால நன்மைக்கும், முன்னேற்றத்திற்கும் உதவும் என்றே கூறமுடியும். அவ்வாறே, குழாய்களில் இருந்து நீர் வீணே வெளியேறுவதனைத் தடுக்கவேண்டும். தரையில் வீணே கொட்டும் கழிவு நீரை காய்கறிச் செடிகளுக்கு ஊற்ற வேண்டும். இவ்வாறே, கட்டுப்பாட்டுடன் சிறிதளவு நீரில் பாத்திரங்களைக் கழுவி சுத்தமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். துணிகளைத் துவைத்த நீரை குளியலறையினைக் கழுவி சுத்தப்படுத்தப் பயன்படுத்தலாம். பூச்செடிகளுக்கும், இதர தாவரங்களுக்கும் தேவையானளவு நீரை மட்டுமே இடவேண்டும்.

## மின்சாரம்




சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய மற்றுமொரு எரிசக்தியே மின்சாரமாகும். எதிர்காலத்தில் எரிசக்தி பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் நாம் மின்சாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். வீடுகளில் வகுப்பறைகளில், பெருந்தெருக்களில், பொது இடங்களில் தேவையின்றி எரியும் மின் குமிழ்களை அணைத்துவிடுவது அவசியமாகும். மேலும், மின் சாதனங்களை வீணே அதிகம் பயன்படுத்துவதும் நாட்டின் எரிசக்திப் பயன்பாட்டின் அதிகரிப்புக்கும் முக்கிய காரணமாக அமைகின்றது. அத்துடன், மின்சாரத்தினை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்தலாம் என்பது குறித்து ஊடகங்களில் அறிவுறுத்தப்படுவதனால், அதுபற்றிய விளக்கத்தினைப் பயன்படுத்தி மின்சாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.



## ஆடை அணிகலன்கள்

உங்களது பாடசாலை சீருடைகள், காலுறைகள் என்பன கிழிந்துவிட்டால், அவற்றை மீண்டும் பாவிக்கக்கூடியதாக இருந்தால் வீட்டிலுள்ளவர்களிடம் அதனைக் கொடுத்துக் தைத்து மீண்டும் அணிந்து கொள்ளுங்கள். அல்லது நீங்களே தைத்தும் கொள்ளலாம். பொத்தான்கள் கழன்றுவிட்டால் அல்லது சட்டைப்பை கிழிந்துவிட்டால் தையல் பிரிந்துவிட்டால் அவற்றை தூக்கியெறிந்து விடாதீர்கள். அதேபோன்று சப்பாத்துகள், பாடசாலைப் புத்தகப்பைகள் என்பன கிழிந்து பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவற்றை தைத்து மீண்டும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். இதன்மூலம் உங்களது பெற்றோரின் பணம் வீண் விரயமாவதைத் தடுத்துக்கொள்ளலாம். ஏனைய ஆடைகள் மற்றும் இதர விடயங்களிலும் அவ்வாறான நடைமுறையையே பின்பற்ற வேண்டும். குறிப்பாக, பெண் பிள்ளைகள் தாம் பயன்படுத்தும் ஒரு கைக் குட்டையையாவது தைத்துக் கொள்ளப் பழக வேண்டும். மாதத்திற்கு ஒருமுறையாவது அல்லது வாரத்தின் இறுதியில் தமது உடைகளின் குறைபாடுகளை சரிசெய்துகொள்ள பிள்ளைகளான நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

## மரத்தளபாடங்கள்




சிலவேளைகளில் பாடசாலைகளில் மேசை, கதிரைகள் என்பன பெருமளவில் உடைந்திருப்பதனை அவதானிக்க முடியும். சில பிள்ளைகள் அவற்றை உடைப்பதனை ஒரு பொழுதுபோக்காக வைத்திருக்கின்றனர். பாடசாலையில் இருக்கும் உபகரணங்கள் தளபாடங்கள் என்பன தேசிய சொத்துக்களாகும். எமது நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் இருந்தே கல்விக்கான நிதி பெருமளவில் ஒதுக்கப்படுகின்றது. இதன்போது, மேசைகள், கதிரைகள், கரும்பலகைகள் என்பனவற்றுக்கும் இதர உபகரணங்களுக்கும் பெருமளவிலான பணம் செலவு செய்யப்படுகின்றது. இவ்வாறு உடைந்து பயன்படுத்த முடியாமல் இருக்கும் தளபாடங்களை பழைய மாணவர்களும், பாடசாலை மாணவ, மாணவியரின் பெற்றோர்களும் இணைந்து வருடத்திற்கு ஒருமுறையாவது திருத்தி புதுப்பித்து எடுப்பார்களாயின், அதற்காக விரயமாகும் பணத்தினை சேமித்து வேறு பிரயோசனம் மிக்க செலவுகளுக்குப் பயன்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லையெனில், னேற்றமும் இல்லை!



## நேர முகாமைத்துவம்



நேரத்தினை திட்ட மிட்டுக்கொள்வது என்பது மிகவும் அவசியமான ஒரு விடயமாகும். அதனூடாக பல வேலைகளை சிக்கல்கள் இன்றி மேற்கொள்ள முடியும். படிக்கும் பிள்ளைகள் நேர அட்டவணை ஒன்றைத் தயாரித்து அதற்கேற்ப பாடங்களைப் படிப்பதனால், நேர விரயம் தவிர்க்கப்படும். தேவையற்ற முறையில் வீணாகும் நேரத்தினை மீளப் பெற முடியாது என்பதனால் கிடைக்கும் நேரத்தினை உரியவாறு பயன்படுத்திக்கொள்வது அவசியமாகும்.



## பணம்

பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் மூலமே பணம் கிடைக்கிறது. இந்த பணத்தைக் கொண்டு உங்களுக்குத் தேவையான உணவுகளை, உடைகளை நீங்கள் சிக்கனமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், அவ்வாறு கிடைக்கின்ற பணத்தை வீணாகச் செலவு செய்யாமல் உண்டியலில் இட்டு சேமிக்கப் பழகிக்கொள்ளுங்கள். இதன்மூலம் ஏதேனும் பயனுள்ள விடயத்திற்கு பெற்றோரின் உதவியினை நாடாமல் உங்களால் சேமிக்கப்பட்ட பணத்தினை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## உணவு



தற்போது உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் சில உணவுகளை நாம் வீணடிக்கின்றோம். எமது முன்னோர்கள் தமது காலங்களில் அரிசி உணவில் தன்னிறைவு அடைந்திருந்தனர். அக்காலகட்டத்தில், இரவு மிஞ்சிவிடும் சோற்றைக் காலையில் வீசும் பழக்கம் இருக்கவில்லை. அதனைக் கஞ்சியாக வடித்து காலை உணவாக உட்கொண்டனர். அந்த உணவு ஆரோக்கியமானதாகவும் பல நோய்களுக்கு மருந்தாகவும் அமைந்தது. இரவில் எஞ்சிவிடும் கறிவகைகளை காலையில் சூடாக்கி உட்கொண்டனர். பலா, ஈரப்பலா, முந்திரி என்பவற்றை உட்கொண்டு பின்னர் மிஞ்சியவற்றை உலர்த்தி எடுத்து வேறு உணவுகளைத் தயாரிக்கும் பழக்கத்தினையும் கைக்கொண்டனர். உணவு சமைக்கும்போது ஒரு பிடி அரிசியை சேமித்து வைக்கும் பழக்கத்தினை முன்னர் வீட்டுத் தலைவிகள் பின்பற்றினர். இவற்றை இன்றும் நாம் முன்னுதாரணமாகக் கொள்ள முடியும்.

## பொருத்தமான பயன்பாடு



எந்தவொரு பொருளையும் உபகரணத்தினையும் பாதுகாப்பாகவும் கவனமாகவும் கையாளுவதனால், அந்த உபகரணம் அல்லது பொருள் நீடித்து உழைக்கக்கூடிய தன்மையினைப் பெறுகின்றது. ஒரு பொருளை கொள்வனவு செய்த முதல்நாளே அப்பொருளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பான ஆலோசனைகளை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும். சிக்கனம் பற்றி பேசும்போது சிலர் கஞ்சத்தனம், உலோபித்தனம் என்று கூறுபவர்களும் உள்ளனர். இங்கு, கஞ்சத்தனம் என்பது வேறு. தேவையின்றிக் கஞ்சத்தனம் காட்டுவது அனைவருக்கும் பயனற்றதாகும். சிக்கனம் என்பது தேவையற்ற வீண் செலவுகளைக் குறைத்து தேவையானதை மட்டும் பயன்படுத்திக்கொள்வதாகும். இதனால், சிறு வயது முதல் சிக்கனமாக செயற்படப் பழகிக்கொண்டீர்களாயின், எதிர்கால வாழ்க்கை சுபீட்சமானதாக அமையும் என்பது உறுதி.

## நூல்கள்



பாடப்புத்தகங்களை சரியான முறையில் பராமரித்து அடுத்த சந்ததியினருக்கு சிறந்த முறையில் கையளிப்பது மாணவர்களது கடமையாகும். அவ்வாறு சரியான முறையில் புத்தகங்களை கையாள்வதனூடாக புதிய புத்தகங்களை அச்சடிக்கச் செலவாகும் பணத்தினை மீதப்படுத்தி அந்த பணத்தினை இதர அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

பாடப்புத்தகங்கள் மட்டுமன்றி, பொதுவாக நீங்கள் கையாளும் புத்தகங்களை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். புத்தகங்களின் பக்கங்களைக் கிழித்தல், புத்தகத்தின் அட்டைகளைக் கிழித்தல், சேதப்படுத்தல் என்பன காரணமாக புத்தகங்கள் வீணாகின்றன. புத்தகங்களின் பக்கங்களைத் திருப்பும்போது, கவனமாகத் திருப்புதல், அவற்றை உரிய பைகளில் வைத்து பாதுகாத்தல் என்பன புத்தகங்களைப் பாதுகாக்கும் சிறந்த வழிமுறைகளாகும்.

ப்ரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - I

பெயர்: ..............................................................

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கீறிடுக.


★ பின்வரும் மூன்று வினாக்களுக்கும் உருக்களை நன்கு அவதானித்து, வேறுபடும் உருவின் கீழ் கீறிடுக.

01)




1. 2. 3.

02)




1. 2. 3.

03)



1. 2. 3.

04) முதல் படத்தில் ஒரு கடதாசித் துண்டை எட்டாக மடித்து அதற்கு துளையிட்டுள்ள விதம் காட்டப்பட்டுள்ளது. அதை மீண்டும் விரித்துப் பார்த்தபோது, காணக்கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?



1. 2. 3.

05) உரோமன் இலக்கத்தில் 49 சரியாக எழுதப்பட்டுள்ள விதம்;

1. LXIX 2. XXXXIX 3. XLIX

★ பின்வரும் கட்டங்களில் இலக்கங்கள் அமைந்துள்ள விதத்தினை அவதானித்து, வெற்றிடங்களுக்குப் பொருத்தமான இலக்கங்களைத் தெரிவுசெய்க.

06)

| | | |
|---|---|---|
| 11 | 14 | 17 |
| 8 | 5 | 20 |
| — | 26 | 23 |

1. 29 2. 5 3. 28

07)

| | | |
|---|---|---|
| 30 | 27 | 25 |
| 19 | 21 | 23 |
| 17 | 15 | — |

1. 21 2. 13 3. 10

★ கீழே காட்டப்பட்டுள்ள தொடர்களின் இடைவெளியில் வர வேண்டிய எண்களின் கீழ் கீறிடுக.


08) 50, 46, ............. 38, 34, ..............

1. 42, 30 2. 42, 36 3. 40, 30

09) 27, 30, 33, .............., .............., 42

1. 35, 38 2. 36, 39 3. 34, 36

10) தரப்பட்டுள்ள இலக்க ஒழுங்கை அவதானித்து, வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்ணை தெரிவுசெய்க.





1. 17 2. 16 3. 15




11) பின்வருவனவற்றுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தால் பிழையான உருவாகும். அதை தெரிவு செய்க.

1. A 2. F 3. T

★ ஒரு பாடசாலையிலுள்ள 5 ஆம் ஆண்டு மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 135 ஆகும். உருவைப் பயன்படுத்தி பிரிவுகள் A, B, C, D யிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை காண்க.




12) A யிலும் B யிலும் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

1. 30 2. 60 3. 90

13) C, D, E பிரிவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 30 2. 60 3. 45

14) C பிரிவில் 25 மாணவர்கள் இருப்பார்களாயின், D பிரிவிலும் E பிரிவிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 60 2. 35 3. 40

15) வடக்கு என்பது ↑ என்னும் குறியீட்டினால் காட்டப்படுமாயின், கிழக்கு என்பது காட்டப்படும் குறியீடு யாது?

1. ↓ 2. → 3. ←

★ பின்வரும் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.

16) அன்பு - தாய் எனின்; கல்வி - .......................

1. புத்தகம் 2. ஆசிரியர் 3. பாடசாலை

17) மின்னல் - ஒளி எனின்; முழக்கம் - ....................

1. இடி 2. மழை 3. ஓசை

18) திருகு- குருதி → குறுகி - ........................

1. திருகி 2. கிறுகு 3. கிருகு

19) நத்து → நோக்கு, ................. போக்கு


1. பந்து 2. போது 3. பத்து

20) ...................... நன்றாகப் படித்து அதிக புள்ளிகளைப் பெற்றான். இங்கு மறைந்திருக்கும் எழுவாய்ச் சொல்;

1. நீ 2. அவன் 3. அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் பெற்றோருக்கு வழக்குத் தொடுத்த ‘கிராமத்து நீதிமன்ற அதிகாரிகள்’





‘வழக்குத் தொடுக்கும் ஐயா’வும் அன்று எம்முடன் இருந்த ஓர் அபூர்வமான மனிதர். அவர் கோட் அணிந்து சாரமும் அணிந்திருப்பார். கௌரவத்திற்கும் கம்பீரத்திற்கும் உரியவர். சிலர் தமது கடமையின்போது தமக்குக் கிடைத்த பித்தளைப் பொத்தான்களையும்



அணிந்திருப்பர். பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதே அவரது பயணியாகும்.

1890களின் இறுதியில் இந்த பதவி உருவாக்கப் பட்டது. கல்வித் திணைக்களமே இவர்களை நிர்வகித்தது. இப்பதவியை ஆங்கிலத்தில் ‘எட்டென்டன்ட் ஒப்பிஸர்’ எனும் பெயரில் அழைத்தனர். தொகை ஆவண மற்றும் தொகையைக் காக்கும் அதிகாரி என்பதே உள்ளூர் மொழிகளில் அப்பதவிக்குரிய பெயராகும். கிராமிய மக்கள் தமது வசதிக்காக ‘வழக்குத் தொடுக்கும் ஐயா’ என அழைத்தனர்.

இந்த பதவியை வகித்தவர்கள் பற்றி நினைவில் உள்ளவர்கள் இன்று எவரும் இல்லை எனலாம். அக்காலத்தில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோரிடத்தில் அக்கறை அதிகம் இருக்கவில்லை. அன்று கிராமங்களிலேயே தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் கற்பிக்கும் பாடசாலைகள் இருந்தன. நகரங்களில் உள்ள அதிகமான பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலமாகவே கற்பிக்கப்பட்டன. அங்கு பிள்ளைகளை அனுப்புவதற்கு பணம் செலுத்தவேண்டும். அத்தகைய பாடசாலைகளை கல்லூரி என்று அழைத்தனர்.

அரசாங்க பாடசாலைகளை ‘அரச பாடசாலைகள்’ என அழைத்தனர். நகரப் பாடசாலைகளாகிய கல்லூரிகளுக்கு செல்வந்தர்களின் பிள்ளைகள் மாத்திரமே சென்றனர். கிராமத்து பிள்ளைகள் அரச பாடசாலைகளுக்கே சென்றனர். அன்று அதிகமான கிராமத்துப் பிள்ளைகள் இடைநடுவில் பாடசாலை செல்வதை நிறுத்திக்

## முன்னைய காலத்து நடைமுறைகள்

கொண்டனர். அவர்கள் பயிர்ச்செய்கை காலத்தில் பாடசாலைக்கு செல்வதில்லை. பெற்றோர்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்றனர். அன்று கிராமங்களில் ஆண்பிள்ளைகள் சாரமும் பெனியனும் அணிந்து பாடசா லைக்கு சென்றனர். பெண்பிள்ளைகள் முழங்காலுக்குக்





கீழ் நீளமான சட்டை அணிந்தனர்.

காற்சட்டையும் சப்பாத்தும் அணிந்த பிள்ளைகள் கல்லூரிகளுக்குச் சென்றனர். குறைந்தபட்சம் பாடசாலைக்கென குறிக்கப்பட்ட புத்தகங்கள்கூட அன்றிருக்கவில்லை. பாடசாலை சீருடையைக்கூட நகரப் பாடசாலை மாணவர்களே அணிந்தனர். கிராமங்களுக்கு அவை வழங்கப்படவில்லை. சில கிராமவாசிகள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவில்லை. சிறு வயது முதலே விவசாயத்திற்கோ அல்லது வேறு தொழிலுக்கோ அவர்களை அமர்த்தினர்.

இதனால், நாட்டின் சகல பிள்ளைகளுக்கும் கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. பதினான்கு வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளையும் பாடசாலைக்கு கண்டிப்பாக அனுப்ப வேண்டும் என்பதே அச் சட்டமாகும். அதனை நடைமுறைப் படுத்துவதற்காக அரசினால் ‘வழக்குத் தொடுக்கும் அதிகாரிகள்’ நியமிக்கப்பட்டனர். அவர்கள் கோட்டம் ஒன்றுக்கு ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டனர். அவர்கள் பாடசாலைக்குச் சென்று மாணவர் தின வரவுப் பதிவை பரீட்சிப்பர். அதன்படி, பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் வீடுகளுக்குச் செல்வார்கள். பெற்றோர்களைத் தேடிக் கண்டுபிடித்து வழக்குத் தொடுப்பர். அவ் வழக்குகள் கிராம நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படும். 1940கள் வரை இப்பதவி நடைமுறையில் இருந்து வந்தது. இலவசக் கல்வியின் முக்கியத்துவத்தை கிராமவாசிகள் உணர்ந்தபின் பிள்ளைகள் கல்வி குறித்து பெரியோர்கள் அதிக அக்கறை எடுக்கத் தொடங்கினர். அத்தோடு, வழக்குத் தொடுக்கும் அதிகாரி எனும் பதவியும் மறைந்தது.

**இரஞ்சித் ஜெயகர்**


## வெல்லுங்கள்!

## விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் ‘TOP News’ SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார ‘விஜய்’ பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

‘TOP News’ SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை ‘விஜய்’ கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*19.03.2014* TOP News கேள்விக்கான விடை:
28 பற்கள்

Pen Drive வெற்றியாளர்:
எஃப்.ரிஃப்கா,
50/18, ஹிஜ்ரா தோட்டம்,
கெஸெல்வத்தை. பாணந்துறை.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(02.04.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

‘TOP News’ SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
02.04.2014

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..............................

கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒரே நாட்டில் இரு நிர்வாக முறை


கரையோரப் பிரதேசமும் மலையகப் பிரதேசமும் ஒரே அரசனின் ஆதிபத்தியத்திட்குட்பட்டாலும் இரு பிரதேசமும் ஒரே நாடாக ஆட்சி செய்யப் படவில்லை. நிர்வாக ஆட்சியிலும் நீதி பரிபாலனத்திலும் ஒன்றுக்கொன்று வேறுபாடுகள் காணப்பட்டன. மலையக உயர் வர்க்கத்தினருக்கு இந்த வேறுபாடுகள் பெரும் பயனை அளித்தன. அதனை உடைத்தால் உயர் வர்க்கத்தினரின் அதிகாரம் மற்றும் சம்பளம், வரப்பிரசாதங்கள் அனைத்தும் வீழ்ச்சி அடையும் என அவர்கள் கருதினர். அரசுக்கு இவ்விரு நிர்வாகங்களுக்கிடையில் ஏற்பட்ட சகல வேறுபாடுகளையும் ஒரே விதமாகக் கொண்டு நடத்த முடியாமல் இருந்தது. அரசு பரந்த மனதோடு நோக்கிய சில விடயங்கள் உயர் வர்க்கத்தினரின் நிலையைப் பாதுகாப்ப தற்கு ஆங்கிலேயரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் சம்பந்தமான நம்பகத்தன்மையில் சில சந்தேகங்களை தோற்றுவித்தன.

கரையோரப் பிரதேசம் மற்றும் மலையகப் பிரதேசம் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டும் தீர்வை வரியுடன் கூடிய கடவையை அல்லது நாட்டு எல்லையைத் தொடர்ந்தும் கட்டிக்காக்க வேண்டிய அவசியம் அரசுக்கிருக்கவில்லை. கடவைகளுக்கிடையில் தொடர்ந்து நடத்தப்பட்ட வர்த்தகத்தின்போது இது வரை அறவிடப்பட்ட தீர்வை வரிப் பணமாகவோ, பொருளாகவோ அறவிடுவதை இடை நிறுத்தும்படி தெரிவித்து அரசு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் மெஜிக் செய்யலாம்

## ஊசி ஒன்றை மிதக்கச் செய்தல்



முதலில் நாம் இன்று உங்களிடம் கேள்வி ஒன்றைக் கேட்கப் போகின்றோம். 'ஊசி ஒன்றை நீரில் இட்டால் என்னவாகும்?'


''மூழ்கிவிடும்'' என்பதுதான் உங்களது பதிலாக இருக்கும். இந்த பதில் சரியானது தான். ஆனால், இன்றைய மாயாஜாலத்தில் ஊசி ஒன்றை மூழ்கச் செய்யாமல் மிதக்க வைக்கக்கூடிய வழிமுறையொன்றையே கற்றுத்தரப் போகின்றோம்.

### தேவையான பொருட்கள்:

சாதாரண ஊசி ஒன்று, காந்தம், நீர் நிறைந்த பாத்திரம்.

மாயாஜால வித்தையை நிகழ்த்திக் காட்டுவதற்கு முன்னர் முன் பயிற்சி ஒன்று அவசியமாகும். அதற்காக காந்தத் துண்டின்மீது ஊசியை நன்கு உரச வேண்டும். இப்பொழுது காந்தத்தினால் உரசப்பட்ட ஊசியே உங்களிடம் இருக்கும்.

### 1 ஆவது படிமுறை:



ஊசியை பார்வையாளர்களிடம் காட்டுங்கள்.

### 2 ஆவது படிமுறை:





ஊசிக்கு சக்தி கிடைப்பது போல் மெஜிக் வார்த்தைகளைக் கூறி, அதனை நீர் நிரப்பப்பட்ட பாத்திரத்தில் இடுங்கள். பார்வையாளர்களை அருகில் அழைத்து ஊசி நீரில் மிதப்பதனைக் காட்டுங்கள்.

**ஆலோசனை:**

ஊசி நீரில் மூழ்கினால் மீண்டும் மீண்டும் காந்தத்தினால் உரசி மெஜிக்கை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்ட முயற்சி செய்யுங்கள். (இதனை பார்வையாளர்களுக்கு தெரியாமல் செய்தல் வேண்டும்)

மெஜிக் மாமா

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5610

எம்.ஆர்.அகீலா, ஹபுகஸ்தலாவ, நுவரெலியா.



அங். இல: 5611

எஃப்.அபினாதாப், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.



அங். இல: 5612

எம்.கனிஸ்கர், மதாரா வீதி, கொழும்பு-15.



அங். இல: 5613

சி.சுலக்சன், றம்பைக்குளம், வவுனியா.



அங். இல: 5614

ச.நளின், மணற்றரை ஒழுங்கை கந்தர்மடம்.



அங். இல: 5615

ஆர்.றொசிட் ஜெனிபர், அரியாலை, யாழ்ப்பாணம்.



அங். இல:5616

க.சாரங்கன், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.



அங். இல: 5617

ஐ.எம்.ஆகில், மாவத்துபொல, அலவத்துகொட.



அங். இல: 5618

எம்.ஃபிஸ்ரோ இலாஹி, காசிம் வீதி, கல்முனைக்குடி-10



அங். இல: 5619

எம்.ருகைம், மக்கள் வங்கி வீதி, கிண்ணியா-06.



அங். இல: 5620

எம்.ரிஸ்கான், ரம்புக்கன வீதி, மாவனல்லை.



அங். இல: 5621

பாத்திமா நுஸ்ஹா, வீ.எச்.வீதி, சாய்ந்தமருது-14.

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................................

முகவரி: ..............................................

..............................................

பாடசாலை: ..............................................

வகுப்பு: ..............................................

திகதி: ..............................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

# தெரிந்து கொள்வோம்





* BRICS நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகள் எவை?

  B- பிரேசில் R- ரஷ்யா I- இந்தியா
  C- சீனா S- தென் ஆபிரிக்கா

* 1950 ஒகஸ்ட் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கி என்ற பெயரை எப்போது பெற்றுக்கொண்டது?

  1985 ஆம் ஆண்டில்


* 2013 இல் ஐ.அ.நடைபெற்ற 'இன்டேல் சர்வதேச விஞ்ஞானப் பொருட்காட்சி'யில் மிகிந்தலைக் கல்லூரி மாணவர் ஒருவர் பரிசு பெற்றார். அவரது பெயர் என்ன? எதற்காகப் பரிசினைப் பெற்றார்?

  புபுது கபுகே என்ற மாணவன் வயல் வரம்புகளை அமைப்பதற்கான இயந்திரத்தைக் கண்டுபிடித்தமைக்காக 3000 டொலர்களைப் பரிசாகப் பெற்றார்.



* இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி யார்?

  கலாநிதி ராஜேந்திர பிரசாத்



* ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளில் 17 நாடுகள் 'யூரோ' நாணயத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்நாடுகளில் அண்மைக்காலமாக பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நாடுகள் எவை?

  கிரேக்கம், போர்த்துக்கல், ஸ்பெயின்

* H.I.V. கிருமியைக் கண்டுபிடித்தவர் யார்? எப்போது கண்டுபிடித்தார்?

  டொக்டர் றொபர்ட் கெல்லே ஃபீல்ட் - 1984 இல்



* ஆறுவகைப் பருவங்கள் எவை?

  1. இளவேனில் காலம்
  2. முதுவேனில் காலம்
  3. கார்காலம்
  4. குளிர்காலம்
  5. முன்பனிக்காலம்
  6. பின்பனிக்காலம்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மிகவும் வன்மையான கற்களின் மேல் நுணுக்கமாகவும் கலைவடிவம் மிகுந்ததுமான சிற்பங்களை செதுக்குவதில் முற்கால சிற்பிகள் சாதனை படைத்துள்ளனர். இத்தகைய புரதான கற்சிற்பங்களில் 'காவற்கற்கள்' முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவை கட்டடங்களுக்கருகில் காணப்படும் கலைப்பொக்கிஷங்களாகும். காவற்கற்களின் ஆரம்பம் குறித்தும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் இங்கு சற்று நோக்குவோம்.**

## காவற்கல்

பண்டைய காலத்தில் விகாரைகள், மாளிகைகள் என்பனவற்றின் நுழைவாயில்களில் கட்டப்பட்டிருந்த படிக்கட்டுக்களின் இரு பக்கங்களிலும் 'கொரவக்கல்' எனப்படும் இரண்டு கற்தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன. படிக்கட்டுக்களின் உறுதிப்பாட்டிற்காகவும் படிக்கட்டுக்களில் ஏறி-இறங்குவோருக்கு வசதியாகவுமே இவை அமைக்கப்பட்டன. பின்னர் கொரவக்கல் எனப்படும் தூண்களில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டதை அடுத்து, இந்த படிக்கட்டுகள் அலங்காரம் மிக்கவையாகத் தோற்றமளித்தன. இந்த கொரவக்கல்லிற்கும் நுழைவாயிலின் நடுவில் அமைக்கப்பட்ட சந்திரவட்டக் கல்லிற்கும் இரு மருங்குகளிலும் அமைக்கப்பட்ட கற்தூணே 'காவற்கல்' எனப்படுகின்றது. அந்த வகையில்; கொரவக்கல், சந்திரவட்டக்கல், காவற்கல் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கலையம்சங்களாகவே கணிக்கப்படுகின்றன. காவற்கல்லானது வட்டவடிவமான மேற்பகுதியைக் கொண்ட கற்தூணாகும். பொதுவாகப் பண்டைய காவற்கற்கள் 3-5 அடி உயரத்தையும் 1-3 அடி அகலத்தையும் கொண்டிருந்தன.

## காவற்கல்லின் ஆரம்பம்

முற்காலத்தில் காவற்கற்கள் எவ்வித அமைப்பினையும் கொண்டதாக இருக்கவில்லை. அவை சாதாரண சதுரக்கற்தூணாகவே இருந்தன. மிகிந்தலை, திரியாய போன்ற பிரதேசங்களில் காணப்படும் புராதன இடிபாடுகளுக்கிடையே சதுரக்கற்தூண்களைப் போன்ற காவற்கற்களை இன்றும் காணலாம். பழங்கால காவற்கற்கள் சிற்ப வேலைப்பாடுகள் இல்லாதவை. அத்துடன், அவை பல்வேறு அளவுகளிலும் காணப்பட்டன. ராஜாங்கனை வட்டதாகே, வெஸ்ஸகிரிய, சோமாவதி தாகபே, மிகிந்தலை ஆகிய இடங்களில் சிற்ப வேலைப்பாடுகள் அற்ற, பல்வேறு அளவுகளிலான காவற்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கற்தூணின் நடுவில்-மேலாக உயர்ந்து செல்லும் அமைப்பினையுடைய காவற்கல் ஒன்று புதுன்தென்ன என்ற இடத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. இது காவற்கல் வளர்ச்சியின் இரண்டாவது படியெனக் கொள்ளப்படுகின்றது.

## புன்கலசத்துடனான காவற்கல்

ஆரம்பகாலத்தைப் போலன்றி, பிற்காலத்தில் காவற்கல்லில் சிற்ப வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டன. சிற்ப வேலைப்பாடுகள் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில் புன்கலசம் மாத்திரம் காவற்கல்லின் மீது செதுக்கப்பட்டது. பெரியகுளத்தில் அமைந்துள்ள வெல்கம் விகாரை, மிகிந்தலையில் சிங்க ஸ்நான தடாகம் ஆகிய இடங்களில் இவ்வாறான காவற்கற்களைக் காணலாம். 'புன்கலசம்' செழுமையின் அடையாளமாகும். காவற்கல்லின் மீது புன்கலசம் செதுக்கப்பட்டமையானது, செழுமையை எதிர்பார்த்தமையைக் குறிக்கிறது. ஆரம்பகாலத்தில் அடிக்கல் மீது கோடாக மாத்திரம் கீறப்பட்டிருந்த புன்கலசம், பின்னர் தெளிவாகத் தெரியும் விதத்தில் செதுக்கப்பட்டது. காலஞ்செல்லச் செல்ல பல்வேறுபட்ட அலங்காரங்கள் புன்கலசத்துடன் இணைந்தன. மிகந்தலை சிங்க ஸ்நான தடாகத்தின் அருகில் காணப்படும் காவற்கல்லில் புன்கலசத்துடன் மலர் மொட்டு ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளது.

## குள்ளர் உருவத்துடனான காவற்கல்

பிற்காலக் காவற்கற்களில் குள்ளர் உருவங்களும் செதுக்கப்பட்டன. 'வாமன உருவம்' எனவும் குள்ளர் உருவங்கள் அழைக்கப்படுகின்றன. குள்ளர் உருவங்கள் பாதுகாப்பின் அடையாளமாக விளங்குகின்றன. இவற்றில் சங்க குள்ளர் உருவங்கள், பத்ம குள்ளர் உருவங்கள் என இரண்டு விதமான உருவ வகைகள் உள்ளன. சங்க குள்ளர் உருவம் சங்குடன் கூடியது. பத்ம குள்ளர் உருவத்தின் தலைமீது தாமரை ஒன்று உள்ளது. குள்ளர் உருவத்துடனான பழமையான காவற்கல் அபயகிரி தாகபேயிற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## நாகராஜ உருவத்துடனான காவற்கல்

பழைய காவற்கற்களிடையே படம் எடுக்கும் நாகங்களுடனான செதுக்கல்களையுடைய காவற்கற்களும் உள்ளன. அவை

பிற்கா
கற்கள
மாற்ற
முனை
உருவ
தின் உ
அதில்
படமெ
மேலு
ஏழு அ
காண



அபயகிரி தாதுகோபுரத்தின் காவற்கல்.



கல்குப்புர விகாரையில் அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடுகளுடனான காவற்கல்.



தெமடமல் விகாரையில் உள்ள ஆண்-பெண் சிற்பங்களுடனான காவற்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொலன்னறுவை வட்டதாகேயிற்கு அருகில் உள்ள காவற்கல்.



ஆரம்ப காலத்தில் இருந்த காவற்கல்லின் அமைப்பு.

# ாவற்கற்களின் லைவடிவங்கள்

ஒற்றை எண்ணிக்கையில் அமைந்துள்ளமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். நாக உருவத்தின் பாதத்திற்கருகில் குள்ளர் உருவம் ஒன்றையோ அல்லது இரண்டையோ காணலாம்.

நாகராஜ உருவத்திலான காவற்கல்லில் காணக்கூடிய ஏதேனும் ஒன்றைக் காணலாம். ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த நாக உருவத்துடனான காவற்கற்கள் கலையம்சத்தில் உயர்ந்தவையாக இருந்தன. ஆரம்பகாலத்தில் புன்கலசம், குள்ளர் உருவம் என்பன தனியாகக் காவற்கற்கள் மீது செதுக்கப்பட்ட போதிலும், நாக உருவத்துடனான காவற்கல்லினை அமைக்கும்போது அந்த உருவங்கள் அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.



வெல்கம் விகாரையில் காணப்படும் புன்கலசத்துடனான காவற்கல்.

பிற்காலத்தில் நாகராஜ உருவமுடைய காவற்கற்களாக உருவாகியுள்ளன. காவற்கற்களின் மாற்றங்களில் இது ஒரு சிறப்பான திருப்பு முனை எனவும் குறிப்பிடலாம். நாகராஜ உருவம் என்பது,மனித உருவெடுத்த நாகத்தின் உருவத்தைச் சித்தரிக்கும் செதுக்கலாகும். அதில் மனித உருவின் தலையைச் சுற்றிப் படமெடுத்த நாக மண்டலம் காணப்படும். மேலும், அதில் படமெடுத்த மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது நாக தலைகளைக் காணலாம். படமெடுத்த நாக உருவங்கள் மற்றுமொரு சிறப்பம்சமாக விளங்குவது மகர தோரணமாகும். அது பல்வேறு விதங்களிலும் வடிவங்களிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. காவற்கல்லின் கலையம்சத்தை அதிகரிக்கவே மகர தோரணம் அமைக்கப்பட்டதெனக் கொள்ளலாம். எனினும், நாக உருவிலான அனைத்து காவற்கற்களிலும் மகர தோரணத்தைக் காண முடியாது. பிற்கால காவற்கற்களின் ஒரு பக்கத்தில் தூண் அமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தூணின் மீது யானை, குதிரை, சிங்கம் போன்ற மிருகங்களில்

## விசேட காவற்கல்

இலங்கையின் பழைய காவற்கற்களில் விசேட காவற்கல்லாக, அபயகிரி விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள ரத்னபிரசாத கட்டத்தில் காணப்படும் காவற்கல் விளங்குகின்றது. அது அநுராதபுர யுகத்தைச் சேர்ந்ததாகும். அந்த காவற்கல்லில் நாகராஜ உருவத்தில் காணப்படும் ஆபரணங்கள் மிக நுட்பமாக செதுக்கப்பட்டுள்ளன. அந்த நாகராஜ உருவத்தின் தலையைச் சுற்றிலும் படமெடுத்த ஏழு நாக பாம்புகளின் வடிவங்கள் காணப்படுகின்றன. நாகராஜ உருவத்தின் பாதத்தின்கீழ் குள்ளர் உருவம் ஒன்றினைக் காணக்கூடியதாக உள்ளது. அலங்கார மகர தோரணமும் அங்கு காணப்படுவதுடன், காவற்கல்லின் தூணின் மீது யானையின் உருவம் ஒன்றும் உள்ளது.

## பொலன்னறுவை யுகக் காவற்கல்

பொலன்னறுவை யுகத்தில் நாகராஜ உருவத்துடனான காவற்கற்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவைக்கால கலையம்சம் பொருந்திய காவற்கல்லாக பொலன்னறுவை வட்டதாகேயிற்கு அருகில் உள்ள காவற்கல்லைக் குறிப்பிடலாம்.பொலன்னறுவை யுகத்தின் இறுதி அரைப்பகுதியில் விகாரை, தேவாலயம், மாளிகை போன்ற கட்டடங்களுக்கு அருகில் காவற்கற்களுக்குப் பதிலாக காவற்சிலைகள் அமைக்கப்பட்டன.

## பிற்கால காவற்கற்கள்

13 ஆம் நூற்றாண்டளவில் காவற்கற்களில் காணப்பட்ட இலட்சணங்கள் பெரும்பாலும் மாற்றமடைந்திருந்தன. அக்காலகட்டத்தைச் சேர்ந்த சில காவற்கற்களில் பெண்களின் உருவங்களையும் காணக்கூடியதாக உள்ளது. 14 ஆம் நூற்றாண்டாகும்போது, காவற்கற்களின் அமைப்பு முன்னரைவிட மாறுபட்டதாக அமைந்தது.


ஆரம்பகாலத்தில் காவற்கற்களில் காணப்பட்ட கலையம்சங்கள் பிற்கால காவற்கற்களில் படிப்படியாகக் குறைவடைந்தமை தெளிவாகிறது. சிற்பக்கலையின் வீழ்ச்சியும் சமூக-பொருளாதாரம் மற்றும் பண்பாடுகள் போன்ற பல்வேறு துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் இதற்கான காரணங்களாகும் எனநம்பப்படுகின்றது.

**இரஞ்சித் ஜெயகர்**





அரண்கெலயில் அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடற்ற காவற்கல்.



கோமரன்கடவளையில் உள்ள சிற்ப வேலைப்பாடற்ற காவற்கல்.



ரத்னபிரசாத கட்டடத்திற்கு அருகில் உள்ள காவற்கல்.



விஜயராமையில் அமைந்துள்ள குள்ளர் உருவத்துடனான காவற்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



தெஹி/நாபாவளை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான எஃப்.ஷஸ்ரா, 177 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அனஸ்-நஸ்லினா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.நஸ்லம், 97 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/அல்-மினா மு.ம.வித்தியாலய மாணவனாவார்.



சாரா ஜன்னத், 89 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/அல்-மினா மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவியான எஸ்.சமீரா, 129 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எம்.சில்மி, 118 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.



க/அல்-மினா மு.ம. வித்தியாலய மாணவனான எம்.இல்ஹாம், 86 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.பஹ்னா, 118 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவியாவார்.



நப்லான் அஹமட், 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார். புத்/உளுக்காப்பள்ளம் மு.ம.வித்தியாலய மாணவனான இவர், நயீம்-றிஸ்வானா தம்பதியரின் புதல்வனாவார்.



எம்.ரஸீன், 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நாவலப்பிட்டி, சென்.மேரிஸ் கல்லூரி மாணவனான இவர், ரிம்சான்-ஜனீரா தம்பதியரின் புதல்வனாவார்.



எம்.ரிகாஸ், 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நாவலப்பிட்டி, சென்.மேரிஸ் கல்லூரி மாணவனான இவர், ரிபாய்தீன்-ருவைஸா தம்பதியரின் புதல்வனாவார்.

## களு/முஸ்லிம் மத்திய கல்லூரி

ஏ.முஹம்மத் அலி, 100 புள்ளிகள்.

எம்.ஆர்.மொஹமட், 99 புள்ளிகள்.

அப்துல் பத்தாஹ், 97 புள்ளிகள்.



ஏ.பாஸித், 89 புள்ளிகள், பெற்றோர்: பாஸிர்-நஸீரா.



பவாஸ் ரஹ்மான், 89 புள்ளிகள், பெற்றோர்: லாஹிர்-பௌசுல் இனாயா.



எம்.பஸ்லுல்லாஹ், 95 புள்ளிகள், பெற்றோர்: பாஹிம்-முப்ஸிரா.



வை.பிரியகாந்த், 95 புள்ளிகள்.



மிஸ்தாக் அஹமட், 88 புள்ளிகள்.


எம்.ராஷ், 91 புள்ளிகள்.

ஏ.யாஸிர், 79 புள்ளிகள்.



# கற்காளான்கள்

பல்கேரியாவில் உள்ள பெலிப்ளாஸ்ட் என்ற கிராமத்தில் காணப்படும் ஒருவகைக் காளான்கள் அழியாமல் அப்படியே உள்ளன. 'என்ன காளான்கள் அழியாமல் உள்ளனவா?' என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆம்...



உள்ள ஏரியில் நீர் பெருகி, அப்பகுதியெங்கும் வெள்ளம் சூழ்ந்தது. பெரும் வெள்ளம் காரணமாக இந்த சுண்ணாம்புப் பாறைகள் நீருக்குள் மூழ்கின. சில நாட்களில் நீரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவை கரையத் தொடங்கின.



காளான்களேதான்! ஆனால், இவை சாதாரணமாக நாம் காணும் பூஞ்சைத் தாவரங்கள் அல்ல. மாறாக, சுண்ணாம்புப் பாறைகளாலான காளான்கள்!

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே 3 மீற்றர் உயரமுள்ள சுண்ணாம்புப் பாறைகள் பெலிப்ளாஸ்ட் கிராமத்தில் இருக்கின்றன. அக்கிராமத்தில் எங்கு பார்த்தாலும் சுண்ணாம்புப் பாறைகளே சூழ்ந்திருக்கும். ஒருமுறை இக்கிராமத்தில் நாட்கள் கழித்து நீர் வற்றியபோது, எல்லோருக்கும் ஆச்சரியம்! காரணம், அங்கிருந்த சுண்ணாம்புப் பாறைகள் எல்லாம் காளான்கள் போன்று உருமாறியிருந்தன. அதன்பின்னர் பல நூறு ஆண்டுகள் கழிந்த பிறகும் இன்றும் இந்தப் பாறைகள் அப்படியே உள்ளன. இப்போது இந்த இடம் சுற்றுலாப் பயணிகளின் மனங்கவர்ந்த இடமாக மாறியுள்ளது.

# உங்களுக்குத் தெரியுமா?

- 'பச்சைத் தங்கம்' என்றழைக்கப்படும் மரம்-யூக்கலிப்டஸ்.
- உலகம் முழுவதும் 3 ஆயிரம் பாம்பு வகைகள் உள்ளன.
- குரங்குகளில் அழகானது என வர்ணிக்கப்படுவது 'மார்மோசெட்' என்ற வகையைச் சேர்ந்த குரங்குகளே.
- நேபாள வாசிகள் எவரெஸ்ட் சிகரத்தை 'சாகர் மாதா' என்றழைக்கின்றனர்.
- முதன்முதலில் அலுமினியத்தைக் கண்டறிந்த நாடு - பிரான்ஸ்.
- 'வாசனைப் பொருட்களின் ராணி' என்ற சிறப்பைப் பெற்றது 'ஏலக்காய்' ஆகும்.
- 100 ஆண்டுகள் தாண்டியும் உயிர்வாழும் உயிரினம்- ஆமை.
- உப்பை விரும்பி உண்ணும் விலங்கு- முள்ளம்பன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துமூல தொடர்பாடல் தேர்ச்சிகள்

✱ மொழியாற்றல் மற்றும் அவற்றைப் பிரயோகிக்கின்ற தேர்ச்சி நிலைகள்.

✱ எழுத்துமூல ஆவணத்தின் தனித்துவங்களுக்கு ஏற்ப திட்டமிட்டு முன் வைக்கும் திறன்கள்.

✱ ஆக்க ரீதியான எழுத்துக்கலை தேர்ச்சிகள்.

✱ எழுத்துமூல ஆவணங்களின் வடிவங்களின் உள்ளடக்கம் சார்ந்த ஆற்றல்கள்.

✱ எழுத்து நடை (மொழிநடை)

✱ எழுத்துமூல ஆவணத்தை தயாரிப்பதற்கு தொழில்நுட்ப அறிவை இணைக்கும் ஆற்றல்.

✱ எழுத்துமூல ஆவணங்களை வாசித்தறிகின்ற ஈடுபாடுகள் ஆவண ஆக்கத்திற்கான திறன்களை உருவாக்கும்.




## ஊடக பாடநெறி 79

## எழுத்துமூல தொடர்பின் சாதக-பாதக தன்மைகள்

எழுத்துமூல தகவல் தொடர்பு நிலையானது-ஏற்கனவே காணப்பட்ட சொல்சார், சொல்சாரா தொடர்பு வடிவத்தில் இருந்து வேறுபட்ட இடத்தை கருத்துப் பரிமாற்ற நிலமைகளில் பெறுவதை உணரக்கூடியதாக உள்ளது. செய்தி ஒன்றை பெருந்திரளான மக்கள் கூட்டத்திற்கு தெளிவாகவும், விளக்கமாகவும், முழுமையாகவும் முன்வைக்கக்கூடியதாகவுள்ளது. தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும், நீண்டகால அடிப்படையில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப ஓர் ஆவணமாகப் பயன்படுத்தக்கூடியது. விரும்பிய நேரங்களில் அறிக்கை படுத்தப்பட்ட கோவைகளிலிருந்து மீண்டும் பயன்படுத்தக் கூடியது. எழுத்துமூலத் தொடர்பு தொழில்நுட்ப ரீதியான புதிய புதிய மாற்றங்களை உள்வாங்கிக்கொள்ளக்கூடிய தனித்துவத்தை கொண்டமைந்தது. அதிக நேர அவகாசத்தில் பல்வேறுபட்ட ஆலோசனைகள், முன்திட்டமிடல்களுடன் தயாரிக்கப்படுகின்றது. தகவல்களை உறுதிப்படுத்தவும், வலுவூட்டவும் அட்டவணைகள், காட்சிப்படங்கள், வரைபடங்கள் இணைக்



கப்படக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றது. பணச் செலவைக் குறைந்தளவில் பிரயோகிக்க கையெழுத்து மூலம் எழுத்துமூல தொடர்பை முன்னெடுக்க முடியும்.

செய்தித் தொடர்பில் சந்தேகங்கள், தெளிவின்மை, விளக்கமின்மை ஏற்படுகின்றபோது, எழுத்துமூலத் தொடர்பு சிக்கலானதாக அமைகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சொல்சார் தொடர்பாடலையே பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. நெகிழ்ச்சியற்ற தன்மை, அனைத்து செய்திகளையும் எழுத்துவடிவில் வழங்க முடியாத தன்மை, திருத்தம் மேற்கொள்ள முடியாத நிலைமைகள், தாமதமான தகவல் தொடர்பு, ரகசியம் பேணப்பட முடியாமை, செய்தியை உணர்வுபூர்வமாக முன்வைக்க முடியாத மற்றும் பரிமாற்ற முடியாத தொடர்பாடல் வடிவமாகவும் இனங்காணக்கூடியதாக உள்ளது. இருப்பினும், எழுத்துமூலமான தொடர்பு வடிவங்கள் தகவல் தொடர்பு வளர்ச்சிப் பரிமாணத்தில் புதிய புதிய அறிமுகங்களை ஏற்படுத்தி இன்று இணைய எழுத்துமூலமான தொடர்பியல் வளர்ச்சியாகவும், நவீன ஊடக வழிமூலமான எழுத்துமூல தொடர்பு வடிவமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.




| | | |
|---|---|---|
| பா ______ | கூ ______ | வா ______ |
| ப ______ | ம ______ | பூ ______ |
| மூ ______ | பு ______ | மு ______ |
| ல ______ | சு ______ | த ______ |

**குரங்கிடமிருந்து எழுத்தைப் பெற்று சொல்லை உருவாக்குங்கள்.**

## தளிர்கரம்



கொண்டைக்கடலை



பயத்தம்பருப்பு



நிலக்கடலை



பட்டாணி



பொறிகடலை

**படத்திற்கேற்ப பெயர்களை இணைக்க.**

## S, s ஆங்கில எழுத்துக்களை எழுதிப் பழகுவோம்.




S S S S S S S S

s s s s s s s s s s

s s s s s s s s s s

S S S S S S S S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மா, அப்பா, மகள் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා: දුව, ඩොක්ටර් චැනල් කළා ද?**
துவ, டொக்டர் ச்செனல் களா த?
அம்மா: **மகள், டொக்டரைச் ச்செனல் செய்தீர்களா?**

**දුව: ඔව් අම්මේ, ඩොක්ටර් පතිරාජ මෙහෙට එනවාලු.**
ஒவ் அம்மே, டொக்டர் பதிராஜ மெஹெட்ட எனவாலு.
மகள்: **ஆம் அம்மா, டொக்டர் பதிராஜ இங்கு வருகிறாராம்.**

**තාත්තා: අද එනව ද දුව?**
அத எனவ த துவ?
அப்பா: **இன்று வருகிறாரா மகள்?**

**දුව: නැහැ තාත්තේ, ඒ ඩොක්ටර්ට හරියට ලෙඩ්ඩු.**
நெஹெ தாத்தே, ஏ டொக்டர்ட ஹறியட்ட லெட்டு.
மகள்: **இல்லை அப்பா, அந்த டொக்டருக்கு ஏராளமான நோயாளிகள்.**

**අදයි හෙටයි දෙකම බැහැ.**
அதய் ஹெட்டய் தெகம பெஹெ.
**இன்றைக்கும் நாளைக்கும் இயலாது.**

**අම්මා: එතකොට කවදාට ද පෙන්වන්නේ?**
எதகொட்ட கவதாட்ட த பென்வன்னே?
அம்மா: **அப்படியென்றால் எப்போது காட்டுவது?**

**දුව: බදාදා තමා පෙන්වන්න පුළුවන්.**
பதாதா தமா பென்வன்ன புலுவன்.
மகள்: **புதன்கிழமைதான் காட்ட முடியும்.**

**අම්මා: ඔව්, දවස් දෙකක් ඉන්න පුළුවන්නේ?**
ஒவ், தவஸ் தெகக் இன்ன புலுவன்னே?
அம்மா: **ஆம், இரண்டு நாட்கள் இருக்கலாம்தானே?**

**තාත්තා: කීයට ද දුව යන්න ඕනේ?**
கீயட்ட த துவ யன்ன ஒனே?
அப்பா: **எத்தனை மணிக்குப் போக வேண்டும் மகள்?**

**දුව: ඩොක්ටර් හතරට එනවා. තාත්තාට නොම්මර 2. හතර වෙනකොට ඩොක්ටර් ගාවට යන්න.**
டொக்டர் ஹதரட்ட எனவா. தாத்தாட்ட நொம்மர 2. ஹதற வெனகொட்ட டொக்டர் காவட்ட யன்ன.
மகள்: **டொக்டர் நான்கு மணிக்கு வருகிறார். அப்பாவுக்கு 2ஆவது இலக்கம். நீங்கள் நான்கு மணியளவில் போங்கள்.**

**අම්මා: හොඳයි දුව.**
ஹொந்தய் துவ.
அம்மா: **நல்லது மகள்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. අදයි ................ දෙකම බැහැ.
2. කීයටද දුව ................ ඕනේ?
3. .................. හතරට එනවා.




நிகழ்கால தனி வாக்கியங்களில் (Present Simple Tense) காணப்படுகின்ற வினா, உடன்பாடு மற்றும் எதிர்மறை வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) உனது சகோதரன் கதைப் புத்தகங்கள் வாசிப்பதுண்டா?
Does your brother read story books?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஆ) ஆம், அவன் கதைப் புத்தகங்கள் வாசிப்பதுண்டு.
Yes, he reads story books.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

இ) இல்லை, அவன் கதைப் புத்தகங்கள் வாசிப்பதில்லை.
No, he does not read story books.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Does your brother read? (Interrogative)
உனது சகோதரன் வாசிப்பதுண்டா? (வினா)

* Yes, he reads.
ஆம், அவன் வாசிப்பதுண்டு.
* No, he doesn't read.
இல்லை, அவன் வாசிப்பதில்லை.

ஈ) உனது சகோதரி தினமும் நூலகத்துக்குப் போவதுண்டா?
Does your sister go to the library daily?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

உ) ஆம், அவள் தினமும் நூலகத்துக்குப் போவதுண்டு.
Yes, she goes to the library daily.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஊ) இல்லை, அவள் தினமும் நூலகத்துக்குப் போவதில்லை.
No, she does not go to the library daily.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Does your sister go? (Interrogative)
உனது சகோதரி போவதுண்டா? (வினா)

* Yes, she goes.
ஆம், அவள் போவதுண்டு.
* No, she doesn't go.
இல்லை, அவள் போவதில்லை.

எ) உங்கள் நாய் இரவில் குரைப்பதுண்டா?
Does your dog bark at night?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஏ) ஆம், அது இரவில் குறைப்பதுண்டு.
Yes, it barks at night.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஐ) இல்லை, அது இரவில் குரைப்பதில்லை.
No, it does not bark at night.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

* Does your dog bark? (Interrogative)
உங்கள் நாய் குரைப்பதுண்டா? (வினா)

* Yes, it barks.
ஆம், அது குரைப்பதுண்டு.
* No, it doesn't bark.
இல்லை, அது குரைப்பதில்லை.

* read- நிகழ்கால வினைச்சொல் (மூல வினைச்சொல்)
* reads- நிகழ்கால வினைச்சொல். (படர்க்கை ஒருமை எண் சகிதம் கையாளப்படும் வினைச்சொல்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுத்தம் சுகம் தரும்!

சுத்தம், எல்லோரும் விரும்பும் ஒரு விடயமாகும். சுத்தம் அழகுக்கு மட்டுமன்றி, ஆரோக்கியத்திற்கும் அவசியமானது. தனிநபர் சுத்தம், சுற்றாடல் சுத்தம், வீட்டுச் சூழல் சுத்தம் என்று இது பலவகைப்படும்.

## ஆடைகளின் சுத்தம்

சுத்தமான ஆடைகளே, ஒருவரை மதிப்பிட உதவுகின்றது. சுத்தமாக இருப்பதற்கு பலவிதமான ஆடைகளை அணிய வேண்டும் என்று பலர் கருதுவர். ஆனால், இது தவறான அர்த்தப்படுத்தலாகும். ஒருவரிடம் இரண்டு ஆடைகள் மட்டுமே இருந்தாலும் அதனைத் துவைத்து வெயிலில் உலர்த்தி-சுத்தமாக அணிவதே சிறப்பானதாகும். அத்துடன், உள்ளாடைகள் குறித்தும் சுத்தம் பேணப்படல் வேண்டும். ஈரமான ஆடைகளை அணிதல் கூடாது. அது சருமத்தில் பல நோய்களை ஏற்படுத்தும்.

## காலுறைகள்

பாடசாலை செல்லும் பிள்ளைகள் சப்பாத்துக்களையும் காலுறைகளையும் பாடசாலை முடிந்து வீடு திரும்பும்வரை அணிந்திருப்பதனால், பாதங்களிலிருந்து வெளியேறும் வியர்வை, காலுறைகளினால் உறிஞ்சப்படுகின்றது. எனவே, நாளாந்தம் காலுறைகளைக் கழுவி சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும். சிலர் காலுறைகளைக் கழுவாமல் வெயிலில் உலர்த்தி எடுப்பர். இது தவறாகும். ஏனெனில், வெயிலில் உலர்த்தும்போது வியர்வை ஈரம் மட்டும் உலருமே தவிர, வியர்வை அசுத்தம் அகன்றுவிடாது. இதனால், இவ்வாறான காலுறைகளை அணியும் போது துர்நாற்றம் வீசும். இது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த அசௌகரியத்தை ஏற்படுத்தும். அத்துடன், அழுக்கான காலுறைகளை அணிவதனால், விரல்களுக்கு இடையில் tinea pedis என்ற பூஞ்சைத் தொற்று உருவாகக்கூடும்.

## பேன் தொல்லை


பாடசாலை செல்லும் மாணவர்கள் மத்தியில் காணப்படும் மற்றுமொரு பிரச்சினைதான் பேன் தொல்லை. தலையில் பேன்கள் இருந்தால், தலையை அடிக்கடி சொறிய நேரிடும். இது பெரும் அசௌகரியம் தரும் விடயமாகும். நன்கு குளித்து சுத்தமாக இருந்தால் பேன் தொல்லை ஏற்பட மாட்டாது. உடல் சுத்தத்தினைப் பேண நாளாந்தம் குளிப்பது அவசியமாகும். நீண்ட நாட்களுக்கு குளிக்காமல் இருந்து விட்டால், பேன் மற்றும் பொடுகுத் தொல்லை அதிகரிக்கும்.



## கைகளின் சுத்தம்

கைகளை அடிக்கடி கழுவிச் சுத்தம் செய்து கொள்வதும் சிறந்த பழக்கமாகும். குறிப்பாக, மலசல கூடம் சென்று வந்த பின்பு கைகளை சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் வேண்டும். கைவிரல் நகங்களின் அதிக வளர்ச்சி சுத்தத்திற்குப் பெரும் எதிரியாக உள்ளது. ஏனெனில், கைகளை முறையாகக் கழுவாத விடத்து, வளர்ந்த நகங்களில் உள்ள அழுக்குகள் உணவுகளை உட்கொள்ளும்போது உணவின் மூலம் எமது உடலுக்குள் சென்றுவிடுகின்றன. இதனால், நாம் நோய்களுக்கு ஆளாவோம். ஆகவே, நகங்களை வளரவிடாமல் வெட்டிக்கொள்ள வேண்டும். இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றத் தவறினால் வயிற்றில் புழுக்கள் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக் காரணமாகிவிடும். வயிற்றில் புழுக்கள் பெருகினால், அவை இரவில் மலவாயிலில் வந்து முட்டையிட்டு அவ்விடத்தில் அரிப்புத் தன்மையை ஏற்படுத்தும். மேலும் துவாய்கள், படுக்கை விரிப்புகள், உடைகள் என்பனவற்றிலும் கூட புழுக்களின் முட்டைகள் பரவிவிடும். இதனால்,நோய் மற்றவர்களுக்கும் தொற்றக்கூடும். எனவே, தனிப்பட்ட துவாய்களைப் பயன்படுத்தல், படுக்கை விரிப்புகளை அடிக்கடி கழுவிச் சுத்தப்படுத்தல் என்பன புழுக்களினால் ஏற்படும் தொற்று நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கும்.

## பற்களின் சுத்தம்



பொதுவாக, அனைவரும் நாளொன்றுக்கு இரு தடவைகள் பற்களைத் துலக்குவது சிறப்பானதாகும். எனினும், பற்களை நன்கு பாதுகாக்க வேண்டுமாயின், ஒவ்வொரு உணவு வேளையின் பின்பும் பற்களைத் துலக்க வேண்டும். குறிப்பாக, இனிப்பான உணவுகளை உட்கொண்ட பின்னர் பற்களை சுத்தம் செய்தல் நலமானது. அவ்வாறு பல் துலக்க முடியாவிட்டால், வாயை நன்கு கொப்பளிக்க வேண்டும். மேலும் பற்தூரிகையை சரியான முறையில் பயன்படுத்துவதன்மூலம் பற்களில் தங்கியுள்ளவற்றை அகற்ற முடியும். இவ்வாறு பற்களை சிறப்பாகப் பாதுகாக்காவிடின், பற்களில் தங்கிவிடும் உணவுகளில் பக்றீரியாத் தொற்று ஏற்பட்டு பற்சிதைவு ஏற்படும். இதனால், பல் முரசு கரைந்து வாயில் துர்நாற்றம் வீசும். ஆகவே, ஒவ்வொருவரும் பற்சுகாதாரத்தைப் பேணுவது மிகவும் அவசியமாகும்.

## ஒழுங்கின்மையும் சுத்தத்திற்கு இடையூறாக அமையும்

பாடசாலை செல்வதற்காக நேரத்தோடு நித்திரை விட்டு எழாமல், தாமதித்து எழுந்து அவசர அவசரமாக பாடசாலை செல்லத் தயாராகும் சிறுவர்களும் நம் மத்தியில் இருக்கின்றனர். இவர்கள், நன்றாக முகம் கழுவியிருக்க மாட்டார்கள். உடைகளையும் அப்போதுதான் தேடுவார்கள். இவை தவிர, பாடசாலை செல்வதற்கான இவர்களது ஆயத்தங்கள் அரைகுறையாகவும் ஒழுங்கின்றியும் இருக்கும். இவர்களின் வேலைகள் நேர்த்தியானதாகவும் சுத்தமாகவும் இருக்க மாட்டா. இவர்களது காலைவேளை சுறுசுறுப்பானதாகவும் இருக்க மாட்டாது. இதனால், உடற்சோர்வு, மன அழுத்தம் என்பன ஏற்பட்டு ஆளுமை விருத்தியும் பாதிக்கப்படும். இவையெல்லாம் காலையில் நேரத்துடன் நித்திரை விட்டு எழும்பாமையின் பின்விளைவுகளாகும். ஆகவே, பாடசாலை செல்லும் பிள்ளைகள் இரவில் நீண்ட நேரம் விழித்திருக்காமல், உரிய நேரத்திற்கு நித்திரைக்குச் சென்று அதிகாலையில் விழித்துக்கொள்வதே நலமான காரியமாக அமையும். இவ்வாறு எதிலும் ஒழுங்குமுறை பேணப்பட்டால், சுத்தமும் ஆரோக்கியமும் தாமாகவே எம்மை வந்தடையும். (-பி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா




கடலால் சூழப்பட்ட அவுஸ்திரேலியா தீவு வடக்குத் தெற்காக 3,960 கி.மீற்றர் அகலமும், கிழக்கு மேற்காக 4,000 கி.மீற்றர் நீளமும் கொண்டது. இதன் பரப்பளவு 76,82,300 சதுர கிலோ மீற்றர் ஆகும். அதன் கடற்கரைச் சுற்றுவட்டம் 36,700 கி.மீற்றர் நீளம் கொண்டது. இங்கு காணப்படும் அதியுயர்ந்த மலையாகிய 'கேசியஸ்கோ' 2,228 மீற்றர் உயரம் கொண்டது. கடல் மட்டத்திற்குக் கீழே ஒரு பகுதியும் உள்ளது. அதனை 'இரி' என அழைப்பார்கள். அவுஸ்திரேலியாவின் தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமான பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து 500 மீற்றர் உயரத்திற்கும் குறைவாகவே உள்ளன.

இந்நாட்டின் நிலப்பரப்பு இலங்கையைப் போன்று 120 மடங்கு பெரியது. ஆனாலும், இலங்கையின் சனத்தொகையே அங்கும் உள்ளது. இன்று ஏறத்தாழ 18 மில்லியனுக்குச் சற்றுக் கூடுதலான மக்கள் அங்கு வாழ்கின்றார்கள். இதில் இருபது வீதமான மக்கள் வேறு நாடுகளில் இருந்து அங்கு வந்து குடியேறியவர்களாவார். குறிப்பாக பிரித்தானியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்களே அதிகம் வாழ்கின்றனர்.

ஏ.ஆர்.ஏ.ஷெரீன்,
வண்டியன்வெவ, கெகுணகொல்ல.

# மான்கள்



அண்டார்டிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய இரு கண்டங்களைத்தவிர, உலகில் அனைத்துப் பகுதிகளிலும் மான்கள் வாழ்கின்றன.

புற்கள் மற்றும் தழைகளை உண்டு வாழும் மான்களில் பல வகைகள் இருக்கின்றன. இவற்றில் செவ்ரொடயன்ஸ் எனும் மான்கள் ஆபிரிக்காவில் வாழ்கின்றன. இதன் மொத்த உயரமே ஒரு அடிதான். ஆனால், இதன் உடம்பு சற்றுப் பருத்திருக்கும். இவை, ஆபிரிக்காவின் ஈரவலயப் பகுதிகளியே வாழ்கின்றன. இந்த மான்களைப் பிடிப்பது சற்றுக் கடினமானது. இவ்வாறே, ஆபிரிக்கா நாட்டில் இன்னொரு வகை மானும் இருக்கின்றது. இதன் பெயர் இம்பாலா மான்கள் என்பதாகும். இது மிக வேகமாக ஓடக்கூடியது. அதாவது, மணிக்கு 80km வேகத்தில் ஓடும் ஆற்றல் பெற்றதாகும். அது மட்டுமன்றி; இவை ஒரே பாய்ச்சலில் சுமார் ஒன்பது மீற்றர் தூரத்தை மிக எளிதில் தாண்டிவிடும் ஆற்றல் படைத்தவை.

கே.ரஸியா ரிசான்,
அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொட.





# வெண்கட்டி

வெண்ணாடை போர்த்திக்கொண்ட
வெண்கட்டியே!
கரும்பலகையின் தோழனும் நீயே!
வர்ணங்களின் அழகியும் நீயே!
வெண்மையின் அமைதியும் நீயே!
அறிவின் சிகரமும் நீயே!

ஆசிரியரின் கைதொட்டு ஆசிபெறும்
வெண்மாணவனும் நீயே!
உருளையாரும் நீயே!
ஊசி போன்ற உன் உடலை எமக்கழித்து
தியாகம் செய்பவனும் நீயே!

சாக்கிர் இஸ்மாயில், சாஹிரா தே.பாட., அக்குறனை.

## உங்களுக்குத் தெரியுமா?

★ தென் அமெரிக்காவின் 'சவூதி அரேபியா' என அழைக்கப்படும் நாடு எது?
வெனிசூவெலா

★ தற்போதைய பொதுநலவாய அமைப்பின் செயலாளர் யார்?
கமலேஷ் சர்மா

★ அடுத்த பொதுநலவாய மாநாடு எங்கே நடைபெறவுள்ளது?
மோல்டாவில்

★ இலங்கையின் முதலாவது செயற்கைக்கோள் எது?
சுப்ரீம் செட் - 01

★ உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையங்களைத் தருக?
கிங்காலித் விமான நிலையம் (சவூதி அரேபியா)
அல் மத்தும் விமான நிலையம் (டுபாய்)

ஏ.ஆர்.எம்.ஸஹ்ரான்,
தி/மூதூர் மத்திய கல்லூரி,
மூதூர்.

# தனக்கு வந்தால்தான் தெரியும்

குட்டி முயல் ஒன்று தன் தாயை விட்டுப் பிரிந்து தனியாகச் சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு கழுகு, மெதுவாகப் பறந்து சென்று 'லபக்' என்று அதைப் பிடித்துக்கொண்டது. கழுகால் பிடிக்கப்பட்ட முயல் குழந்தையைப் போல் அழுது துடித்தது.



அதை ஒரு குருவி பார்த்து, "எங்கே போயிற்று உன் வேகம்? நீ வேகமாக ஓடி ஒரு புதருக்குள் பதுங்கியிருந்தால் இப்படி நடந்திருக்குமா?" என்று திட்டியது.

குருவி இவ்வாறு திட்டிக்கொண்டிருக்கும்போது, இன்னொரு பருந்து பறந்து வந்து குருவியை 'லபக்' என்று பிடித்துக் கொண்டது.

அப்போது கழுகுக்கு இரையாகிக்கொண்டிருந்த முயல், "நீ பாதுகாப்பாக இருப்பதாக நினைத்து என்னைத் திட்டினாயே... இப்போது நீயே என்னைப் போன்று துன்பத்தில் சிக்கிக்கொண்டாய். எல்லாமே தனக்கு வந்தால்தான் தெரியும்" என்றவாறு உயிர்விட்டது. குருவியும் தனது கவனக் குறைவினால் ஆபத்தில் சிக்கிக்கொண்டதை உணர்ந்தவாறு மாண்டது.

மு.மு.முஅஸ்ஸமா,
கமு/அல்-ஹம்றா வித்தியாலயம்,
பாண்டிருப்பு.

## தந்தையர்களும் துறைகளும்

| | | |
|---|---|---|
| 01. | மரபியல் | - கிரகர் மெண்டல் |
| 02. | கணக்கியல் | - லூக்கா பெசியோலி |
| 03. | கணினி | - சாள்ஸ் பபேஜ் |
| 04. | கணிதம் | - ஆர்க்கிமிடிஸ் |
| 05. | சமூகவியல் | - மக்ஸ்வெபர், ஷொம்ரே |
| 06. | தமிழ் தட்டச்சு | - முத்தையா |
| 07. | குடித்தொகை கல்வி | - ஜோன் கிரான்ட் |
| 08. | நவீன ஓவியங்கள் | - பிக்காசோ |
| 09. | சார்புக் கொள்கை | - ஐன்ஸ்டைன் |

க.தமிதா,
ஹோலிரோசரி த.ம.வித்., பொகவந்தலாவை.

## படியுங்கள்! தெரியுங்கள்!

★ மனிதனின் தலையிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை எத்தனை?
22

★ ஹிட்லருடைய படையின் பெயர்?
நாசிப்படை

★ உலகில் மிகப்பெரிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது?
கிரேக்கம் (120 வரிகள்)

பாத்திமா ஸிப்ரா,
கெகுனுகொல்ல தேசிய பாட., குருநாகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 09.04.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 18
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

**பரிசுப் பொதி**
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## 3 எத்தனை உள்ளன?



## 1

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை பிரதான படத்தில் இனங்கண்டு, நிறந்தீட்டுக.





## 2

அம்புக்குறிகளின் நிறங்களுக்கான ஆங்கிலப் பெயர்களை உரிய கட்டங்களில் எழுதிப் பூர்த்தி செய்க.




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 79



### மேலிருந்து கீழ்

01. மலச்சிக்கலைப் போக்கும் பழம்.
02. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன். (தலைகீழ்)
04. பெண்-எதிர்ப்பால். (தலைகீழ்)
05. நுனி-எதிர்ச்சொல்.
08. நந்தவனம். (தலைகீழ்)
09. 'காரன்' என்பதன் பெண்பால். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


01. காற்று.
03. மகாபாரதக் கதையே இவர்களால்தான்.
04. 'ஆசீர்வாதம்' என்றும் பொருள்படும். (மாறியுள்ளது)
06. கடைகளின் தொகுதி.
07. நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படுவதற்காக உயர்வாக அமைக்கப்பட்டிருக்கும் இடம். (மாறியுள்ளது)
08. உணவு வகையொன்று.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.78 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | ரு | ணோ | 2 த | ய | ம் |
| தி | 3 கு | | ல | | 4 ஓ |
| தி | | 5 மே | தா | வீ | |
| | 6 டு | | 7 மா | த | வி |
| 8 வே | லி | | ளி | 9 உ | |
| | கை | | கை | | 10 வா |

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 16 விடைகள்

போட்டி: 01
போட்டி: 03
போட்டி: 02




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 16 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
**சி.சயன்தன், கங்கேவத்தை.**

**2ஆம் பரிசு**
**எஃப்.அஃப்ரா, ஹம்பாந்தோட்டை.**

**3ஆம் பரிசு**
**சி.தேனுஜான், பருத்தித்துறை.**

**பாராட்டுப் பெறுவோர்:**

- நிமாஸ், வவுனியா.
- எஸ்.அனிதா, புல்மோட்டை.
- எம்.ஆஷிக், தர்கா நகர்.
- கே.சந்தோஷ், கொழும்பு-13.
- எஃப்.சில்மியா, தெல்தோட்டை.
- கா.திரிசா, முழங்காவில்.
- பாஸா புர்கான், மிரிஹம்பிட்டிய.
- எம்.ஸயான், கொழும்பு-12.
- உமர் அமீர், அக்குறனை.
- ரேச்சல் ஸ்டென்லி, லிந்துலை.

Sponsored by
NATARAJ®
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



தெனியாய என்சல்வத்த P.T பிரிவைச் சேர்ந்த சிவபெருமான்-நாகலெச்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வி சுதர்ஷனி, தனது முதலாவது பிறந்தநாளை விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: மகேஸ்)*



திருகோணமலை விகாரை வீதியைச் சேர்ந்த கமலநாதன்-ஜெகதீஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் உதர்ஷன், தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 29.03.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மடத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.




படல்கும்புற அலுபொத்த சியாரத்தடி வீதியில் வசிக்கும் எம்.ஏ.எம்.றபாய்தீன்-ஹஸீபா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஸம்ஹா, தனது இரண்டாவது பிறந்ததினத்தை 28.03.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: எம்.சீ.எஸ்.அன்சார்)*

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




சுஹைறனா,
பதுரியா மத்திய கல்., மாவனல்லை.



எஃப்.சர்பா,
வெலம்பொட மு.ம.வித்.,
வெலம்பொட



மேரி வஸ்மிதா,
சென்.அனாஸ் பெ.கல்.,
கொழும்பு-13.



பிரசன்னா,
இந்து மகா வித்., கொழும்பு-13.




எ.நஸீப்,
அல்-அக்ஷா மகா வித்., ஆரையம்பதி.



ஆர்.பிரவீனா,
க/ஜெஃப்பர் மத்திய கல்.,
கலகெதர.




எஃப்.இல்மா,
மாறை/சாஹிரா ம.வித்., வெலிபிடிய.



கே.சிந்துஜா,
நு/வ/ஹமிபொரஸ்ட் இல-03 த.வித்.,
கந்தப்பளை.



கஜாஜித்,
மட்/சிவசக்தி ம.வித்., குருமண்வெளி.



கு.பதுர்சிகா,
யா/வட்டு. இந்துக் கல்.,
வட்டுக்கோட்டை.



நிதர்ஷன்,
பழைய ஊர், மன்னம்பிட்டி.



ப.உ.ஜேன்சிகா,
யா/சங்கானை ஸ்தான அ.த.க.பாட.,
சங்கானை.



# பாடசாலை முடிவுற்றும் வீடு திரும்பத் தயங்கும் மாணவர்கள்

சில மாணவர்களுக்கு பாடசாலை என்றாலே வேப்பங்காயாக் கசக்கும். இதனால், பாடசாலை செல்வதற்கு தீவிரமாகவே முரண்டு பிடிப்பார்கள். ஏதாவது காரணங்களையும் கூறுவார்கள்.தலைவலி ஏற்படுவதாகவும் காய்ச்சல், வயிற்றுவலி என்றெல்லாம் கூறுவார்கள். இந்நிலையானது பாடசாலைகளில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளாலேயே ஏற்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை ஆசிரியர்களின் அதிகளவான கண்டிப்பு, கற்றலில் விளக்கம் இன்மை, மாணவர்களிடையே ஏற்படும் முரண்பாடுகள், ஏழ்மை, கற்றலில் ஏற்படும் தடங்கல்கள், கடினத்தன்மைகள் என்பனவற்றை எதிர்கொள்ளும் மனநிலை இன்மை என்பன பெரும்பாலும் காரணங்களாக அமைகின்றன. அத்துடன், அதிகளவு செல்லத்துடன் தன்னம்பிக்கை இன்றி வளர்க்கப்படும் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்லத் தயங்கும் மனநிலையுடனேயே வளர்கின்றன.

இவ்வாறாக இன்னும் ஒரு பிரிவினர் உள்ளனர். இத்தகைய மாணவர்கள் பாடசாலைக்கு பிரச்சினைகள் இன்றிச் செல்கின்றனர். ஆனால், அங்கிருந்து உரிய நேரத்திற்கு வீடு திரும்ப விரும்புவதில்லை. பெரும்பாலும் பாடசாலையிலேயே தமது நேரத்தை செலவிட முனைகின்றனர். இத்தகைய நிலைப்பாடு ஓரளவு ஆரோக்கியமானது என்றாலும், வீடு திரும்ப விரும்பாது பேருந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும்



வீதிகளில் தமது நேரத்தை செலவிட விரும்பும் மாணவர்களே அவதானத்துக்குரியவர்கள் ஆகின்றனர். இவ்வாறான பிள்ளைகள் தீய நட்பு வட்டத்தில் சிக்குவதுடன், போதைப்பொருள், மது, புகைத்தல், தவறான இணையத்தளப் பிரயோகம் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட முனைகின்றன. இத்தகைய பிரச்சினைகள் அல்லது மனநிலைகள் வாழ்விடங்களில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளினாலேயே ஏற்படுகின்றன.

அந்தவகையில், பெற்றோர்களுக்கிடையே ஏற்படும் வாக்குவாதங்கள், முரண்பாடுகள், பிள்ளைகள் தொடர்பான கவனிப்பு இன்மை, வீட்டுச் சூழலில் காணப்படும் மகிழ்ச்சியற்ற-சமாதானம் அற்ற தன்மை, மதுபான பாவனை என்பன பெரும்பாலும் காரணங்களாக அமைகின்றன. இத்தகைய நிலைகளால் தமது வாழ்விடங்களுக்கு உரிய நேரத்திற்கு சென்றடைய விரும்பாத இத்தகைய மாணவர்கள் தமது மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி கற்றலை சிறப்பாக மேற்கொள்வதே ஆரோக்கியமான நடைமுறையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்



ஏர்ல் டிக்சன்
(Earle Dickson)
1920 - அமெரிக்கா



பிளாஸ்டர்



லூயிஸ் ப்ரெய்ல்
(Louis Braille)
1829 - பிரான்ஸ்



பார்வையற்றவர்களுக்கான ப்ரெய்ல் முறை



வோல்ட்டர் இ.டெய்மர்
(Walter E.Diemer)
1928 - பென்சில்வேனியா



சுவிங்கம்



ஹென்ரி சீலி வைட்
(Henry Seely White)
1882 - நியூயோர்க்



மின்னழுத்தி



ஜேஸ் டபிள்யூ.ரெனோ
(Jesse W.Reno)
1891 - அமெரிக்கா



Escalator



ப்ரேங்க் எபர்சன்
(Frank Epperson)
1905 - கெலிஃபோர்னியா



ஐஸ்பழம்

# உயிரியல் வகைப்பாடு


## தேரை அல்லி



*Liliaceae* குடும்பத்தின் பதினெட்டு இனங்களில் பூக்கும் தாவரங்களின் பேரினம் *Tricyrtis* ஆகும். இதனை தேரை அல்லி எனவும் ஆங்கிலத்தில் Toad lilies எனவும் அழைக்கின்றனர். இதன் பூர்வீகம் சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளாகும். இதன் வேறு சில இனங்கள் உலகின் ஏனைய பகுதிகளில் அலங்காரச் செடிகளாக வளர்க்கப்படுகின்றன. கிழங்குகள் மூலம் பெருக்கமடையும் இச்செடி குட்டையான புதர்ச்செடிகளாகும். ஒரு தண்டில் ஒரு பூ அல்லது அரிதாகப் பல பூக்கள் என அழகிய வண்ணங்களில் தேரை அல்லி மலர்கள் பூக்கின்றன. இந்த பூக்களில் திட்டுத் திட்டாக கடுமையான நிறங்கள் கலந்து பூக்கின்றன.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : ஒருவித்திலைத் தாவரம் |
| வரிசை | : *Liliales* |
| குடும்பம் | : *Liliaceae* |
| துணைக்குடும்பம் | : *Calochortoideae* |
| பேரினம் | : *Tricyrtis* |

## கொத்து அல்லிகள்



*Brodiaea* பேரினத்தைச் சேர்ந்த *Asparagaceae* குடும்பத்தின் பூக்கும் தாவரம் கொத்து அல்லிகள் ஆகும். இவை குறிப்பாக வடக்கு கெலிஃபோர்னியா, வட அமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் பூக்கின்றன. இவை தரையில் படர்ந்து வளரக்கூடிய குட்டைச் செடிகளாகும். கிழங்குகள் மூலமே இவை பெருக்கமடைகின்றன. பெரும்பாலும் கொத்து அல்லிகள் ஊதா, வெள்ளை மற்றும் நீல நிறங்களிலேயே பூக்கின்றன. ஒரு தண்டில் கொத்துக் கொத்தாக பல பூக்கள் பூப்பதனாலேயே கொத்து அல்லிகள் என்று அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| மேற்கத்தேய | : குமரி |
| மேற்கத்தேய | : ஒருவித்திலைத் தாவரம் |
| வரிசை | : *Asparagales* |
| குடும்பம் | : *Asparagaceae* |
| துணைக்குடும்பம் | : *Brodiaeoideae* |
| பேரினம் | : *Brodiaea* |

## ரஃப்ளேஷியா மலர்



உலகின் மிகப்பெரிய மலர் என்று அறியப்பட்டுள்ள ரஃப்ளேஷியா மலரின் புனைப் பெயர் 'பிணத்தை மலர்' எனப்படுகின்றது. *arnoldii* பேரினத்தின் உறுப்பினரான ரஃப்ளேஷியா, பயங்கரமாக துர்மணம் வீசக்கூடியது. இம்மலர்கள் பெரும்பாலும் சுமாத்ரா மழைக்காடுகளிலேயே காணப்படுகின்றன. ரஃப்ளேஷியா மலர் 11 கிலோகிராம் எடையுடன் 3 அடி விட்டமும் கொண்டது. இம்மலர் சிவப்புக் கலந்த பழுப்பு நிறத்தில் பூக்கக்கூடியது. இந்த பூக்கள் பெரும்பாலும் ஈக்களையே கவர்ந்திழுக்கக்கூடியது. மேலும், இந்தப் பூக்களைக் கண்டறிவது மிகவும் கடினமானதாகும். இதன் மொட்டுக்கள் உருவாக பல மாதங்கள் எடுத்து மலர் மலர நீண்ட நாட்கள் எடுக்கின்றது. அத்துடன், சுமாத்ரா காடுகள் அழிவடைந்து வருவதனால், இப்பூவினமும் அழியும் அபாயத்தில் உள்ளது.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : ஒருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Rosids* |
| வரிசை | : *Malpighiales* |
| குடும்பம் | : *Rafflesiaceae* |
| பேரினம் | : *Rafflesia* |
| இனம் | : *R.arnoldii* |

## ஃபோர்சிதியா



ஒலிவ் குடும்பத்தின் பூக்கும் தாவரங்களின் பேரினம் ஃபோர்சிதியா மலர் வகையாகும். சுமார் 11 இனங்கள் தென்கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியாவில் உள்ளன. வசந்த காலத்தில் பூக்கக்கூடிய இப்பூக்கள் மஞ்சள் மற்றும் இளஞ்சிவப்பு நிறங்களில் அடர்ந்த புதர்போன்று பூக்கின்றன. இலைகளே இல்லாத அளவிற்கு இச்செடிகளில் மஞ்சள் நிறப் பூக்கள் பூத்திருப்பது மிக அழகாகவே காணப்படும்.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : ஒருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Lamiales* |
| குடும்பம் | : *Oleaceae* |
| பேரினம் | : *Forsythia* |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரண ஆலோசனை



முதலுதவி அணி முறையிலா, குழு முறையிலா இருப்பது நல்லது?

சாரணர்களுக்கு ஆரம்பத்தில் இருந்தே முதலுதவிப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இது சாரணருடைய அயலவர்களுக்கும் உதவியாக இருக்கும். ஒவ்வொரு சாரணனுடைய பயணப்பொதியிலும் முதலுதவி உபகரணங்கள் இருக்க வேண்டிய ஒன்று என்பதை சாரணன் மறப்பதில்லை. தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப முதலுதவிப் பொருட்களை தம்மிடம் வைத்துக்கொள்ள லாம். அணிச் செயற்பாட்டில் கண்டிப்பாக முதலுதவி உபகரணங்களை வைத்துக்கொள்வது அவசியம். இதில் காவும் தடிக்குப்பதிலாக நீங்கள் பயன்படுத்தும் தண்டத்தை இதற்காகப் பயன்படுத்த முடியும். இதற்கு உங்கள் ஆடைகளை மேலதிகமாகப் பயன்படுத்தலாம். குறிப்பாக, ஒவ்வொரு அணியில் இருந்தும் ஒரு சாரணன் முதலுதவியாளராக இருக்கின்றமை பொதுவான விடயமாக உள்ளது. இதற்கமைய, அவர்கள் விசேட பயிற்சிகளைப் பெறுவது முக்கியம்.



இதைவிட சகலரும் ஒவ்வொரு விருதுகளுக்கும் இச்சின்னம் பெறப்படல் வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதில் 11-15 வயதுவரையான சாரணர்கள் JA/07 இலக்கச் சின்னமும், 15-18



S.A./07 Ambulance
J.A./07 First Aid

வயதுவரையான சாரணர்கள் SA/07 இலக்கச் சின்னமும் பெறல் வேண்டும். திரிசாரணருக்கும் இவ்வாறான பதக்கங்கள் உள்ளன. இவை கட்டாயம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள தெரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்களும் அணிமுறையில் இருப்பது நல்லது.

(அறிவுரை தொடரும்...)

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| சிலி | 19,672 | 1922/1974 | 1909 |


தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

**அடுத்த வாரம் வருவது....**

கூடாரம் அமைக்கும் போது, கவனிக்க வேண்டிய சில விடயங்கள்




## பேனை பென்சில்களை வைப்பதற்கு கைப்பை செய்வோம்





சாரணர்கள் தமது கூடாரத்தினை எவ்வாறு அமைத்துக்கொள்கின்றார்களோ, அவ்வளவிற்கு முக்கியமானது, அங்கு பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் தமது உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளும் முறைகளாகும். அதற்கமைய படத்தினைப் பார்த்து, இவ்வாறான முறைகளைப் பின்பற்றுவோம்.

# வட மாகாண சாரணர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

வட மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் கலைக்கூறு-1 பயிற்சியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் சாரணர் தலைவர்களுக்கு, சின்னம் சூட்டும் நிகழ்வு, கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் மார்ச் 15 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வு மாவட்ட ஆணையாளர் கி.விக்கினராஜா (அதிபர், கிளிநொச்சி இந்துக் கல்லூரி) தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு தி.இராசநாயகம் (முன்னாள் அரசாங்க அதிபர்- கிளிநொச்சி, தலைவர்-மகாதேவா சைவச் சிறுவர் இல்லம்- கிளிநொச்சி) அவர்கள் கலந்துகொண்டு சாரணர் தலைவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். சாரணர் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் இவருடைய சேவையினைப் பாராட்டி கௌரவப் பதக்கத்தினை முன்னாள் மாவட்ட ஆணையாளர் கலாநிதி எம்.புவனேந்திரன் அவர்கள் சூட்டிக் கௌரவித்தார். பயிற்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆணையாளர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். கிளிநொச்சி இந்துக் கல்லூரி சமூகத்தின் ஆதரவில் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வுகள் தொடர்பான படங்களை இங்கு காணலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசி ஒன்றினால் எமது தோலில் குத்தப்பட்டால், எமக்கு அது வேதனையை ஏற்படுத்துகின்றது. அதனை நாம் உடனே உணர்ந்துவிடுவோம். இந்த வேதனையை உணர்வதற்கு உடலில் அமைந்துள்ள நரம்புத் தொகுதிகள் எமக்கு உதவுகின்றன. ஆனால், ஊசியினால் உடலில் குத்தப்பட்டதும் அந்த வேதனையை உணராத தழும்புகள் எமது தோல் மீது தோன்றியிருந்தால், அது பற்றி நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.





நோர்வே நாட்டுப் பௌதிகவியல் விஞ்ஞானியான ஜெஹராட் ஹென்சன், 1873 இல் தொழுநோய் பரவுவதற்குக் காரணமாக அமையும் பக்ற்றீரியாவை இனங்கண்டார்.

# மீண்டும் தலைதூக்கும் 'தொழுநோய்'



தொழுநோய் தொற்றுக்குக் காரணமான பக்ற்றீரியா- மைகோபெக்டீரியம் லெப்ரே

ஏனெனில் இது தொழுநோய்க்கான அறிகுறியாக இருக்கக்கூடும். தொழுநோயானது, முற்காலத்தில் மனித சமுதாயத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக, குணப்படுத்த முடியாத நோயாக இருந்தது. எனினும், தற்போது முற்றாகக் குணப்படுத்திவிடக்கூடிய வசதிகளும் மருந்துகளும் உள்ளன. ஆக, தொழுநோய்க்கான சிகிச்சையினை உரிய முறையில் தொடர்ச்சியாக மேற்கொள்வதே அவசியமாகும்.

## ஆபத்து எங்கே?

இலங்கையில் இன்றளவில் தொழுநோய் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றபோதிலும், கடந்த 10 ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அதற்கமைய, ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2 ஆயிரம் நோயாளிகள் பற்றிய புதிய தகவல்கள் கிடைத்து வருகின்றன. குறிப்பாக கொழும்பு மாவட்டத்தின் சனநெரிசல் மிக்க பகுதிகளிலேயே இந்த நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவர்களில் சிறு பிள்ளைகளும் அடங்குவர். நோயை வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தபோதிலும், நோய் ஏற்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துவதில் ஏற்படும் தாமத நிலைகள், இந்த நோயைத் தீவிரப்படுத்திவிடுகின்றன. எனவே, ஆரம்பத்திலேயே இந்த நோயை இனங்கண்டுகொள்ள வேண்டும். அதற்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு இருப்பது அவசியமாகும்.

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டதன் பின்னர், அதற்கான சிகிச்சைகளை ஆரம்பிப்பவர்களில் 20 சதவீதமானவர்கள் சிகிச்சைகளை இடைநிறுத்திக்கொள்கின்றனர். இதனால், தொழுநோயினை நாட்டில் இருந்து முற்றாக ஒழிப்பது கடினமான விடயமாக உள்ளது. இவ்வாறான நோயாளிகளுக்கு மீண்டும் சிகிச்சைகளை ஆரம்பிக்கும்போது, தொழுநோய் பக்ற்றீரியாக்கள் அந்த மருந்துகளுக்கு எதிர்ப்பாற்றலை வெளிப்படுத்துவதனால், நோயைக் குணமாக்க முடியாத நிலைமையே ஏற்படுகின்றது.



உலகின் மிகப் பழமையான தொழுநோய் வைத்தியசாலையான ஹெந்தலை வைத்தியசாலை

## தொழுநோய் குறித்த விழிப்புணர்வு

தொழுநோய் என்பது, தோல் மற்றும் நரம்புத் தொகுதி சார்ந்த பக்ற்றீரியா தொற்றாகும். இது நீண்டநாள் நிலைத்திருக்கக்கூடிய பக்ற்றீரியாவாகும்.

**நோய்க்காவி:** மைகோபெக்டீரியம் லெப்ரே (Micobacterium lepre)

**நோய்த் தொற்று:** சளி, மூக்கிலிருந்து வடியும் நீர், எச்சில் என்பனவற்றில் உள்ள பக்ற்றீரியாக்கள் சுவாசம் மற்றும் வாய் வழியாக உடலினுள் சென்று நோயைத் தொற்றச் செய்கின்றன.

**நோய் அறிகுறிகள்:** உணர்ச்சி குறைந்த அல்லது உணர்ச்சியற்ற இளம் சிவப்பான தழும்புகள் (கறுப்பு நிற சருமத்தில் பளுப்பு நிறத் தழும்புகள்) காணப்படல், அந்த தழும்புகள் உள்ள பகுதிகளுக்கருகில்- தோலில் உலர்வுத் தன்மையும் ரோமம் அற்ற தன்மையும் காணப்படல், தோலின் நிறத்திலேயே சிறிய தடிப்பான அமைப்புகள் காணப்படல், காது மடல்கள் தடிப்பமாக இருத்தல், நரம்பு வெளித்தள்ளுதல், மணிக்கட்டுப்பகுதிகள் மற்றும் கழுத்துப்பகுதிகளில் உணர்வற்ற நிலை, கண் இமைகள் மெல்லியதாகுதல், கைகள் மற்றும் கால்களில் நீண்டகால உணர்வற்ற தன்மை, குணமடையாத காயங்கள், கை-கால்கள் வளைந்துவிடல்.

## நோய் அறிகுறிகள் தென்பட்டால் அல்லது சந்தேகம் ஏற்பட்டால்...

மேற்கூறிய நோய் அறிகுறிகள் தென்பட்டாலோ அல்லது தொழுநோய் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டாலோ, உடனடியாக அண்மையில் உள்ள அரச வைத்தியசாலையின் தோல் நோய்கள் தொடர்பான சிகிச்சைப் பிரிவுக்குச் சென்று-தொழுநோய் ஏற்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ள முடியும்.



காது மடல் வீக்கம்



சருமத்தில் ஏற்படக்கூடிய உணர்வற்ற இளம் சிவப்பு நிறத் தழும்பு

## தவறான அபிப்பிராயங்களைக் களைந்து விடுங்கள்


தொழுநோய் என்பது பரம்பரை நோயன்று. எனவே, இந்த நோய் சந்ததிகளுக்கு கடத்தப்பட மாட்டாது. தொழுநோய் என்பது ஏனைய நோய்களைப் போன்று ஏற்படும் ஒரு பக்ற்றீரியா தொற்றாகும். எனவே, தொழுநோய்க்கு சிகிச்சை பெறுவது குறித்து எவரும் வெட்கமடையத் தேவையில்லை. தொழுநோயாளரின் தொடுகையினால் மற்றவர்களுக்கு தொழுநோய் தொற்று ஏற்படுவதில்லை.

தொழுநோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரின் விரல்கள் யாவும் அழுகி-கீழே விழும் என்ற தவறான எண்ணம் இன்றும் உலக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஆனால், இது தவறான கருத்தாகும். இந்நோயினால் பீடிக்கப்பட்டவுடன் ஏற்படும் உணர்வு அற்ற தன்மை காரணமாக, விரல்களில் ஏற்படும் காயங்கள் ஆழமாக ஊடுருவி விரல்களின் எலும்புகளைப் பாதிப்பதே இவ்வாறு நடைபெறக் காரணமாகும். இதன்போது, எலும்புகள் பாதிப்படைவதனாலேயே விரல்கள் குறுகி வளைந்துவிடுகின்றன. மைகோபெக்டீரியம் லெப்ரே எனும் பக்ற்றீரியா, பலரின் உடலினுள் செல்கின்றபோதிலும் அவர்களில் நூற்றுக்கு 10 வீதமானவர்களுக்கு மட்டுமே தொழுநோய் ஏற்படுகின்றது.

தொழுநோயிலிருந்து முற்றாகக் குணமடைய வேண்டுமாயின், 6 மாதங்களுக்கு தொடர் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது, தொடர்ந்து மருந்துகளை உள்ளெடுக்க வேண்டும். அவ்வாறன்றி, நீண்டகால சிகிச்சைகளைப் பெறுவதாயின், குறித்துரைக்கப்பட்ட மாத்திரைகளை தவறாது 12 மாதங்கள் வரை உள்ளெடுக்க வேண்டும். இவ்வாறு தொடர் சிகிச்சைகளைப் பெறுவதனூடாக ஆரம்பத்திலேயே குணம் பெறலாம்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ஏப்ரல் - 1 முட்டாள்கள் தினம்




ஏப்ரல் 1 ஆம் திகதி 'முட்டாள்கள் தினம்' (ஏப்ரல் ஃபூல்- April Fool) என்று கூறப் படுகின்றது. இந்நாளில் யாரும் யாரைப் பார்த் தும் வேண்டிய விதத்தில் பொய்களைக் கூறி அவர்களை ஏமாற்ற முயற்சிக்க முடியும். ஏமாறுபவரைப் பார்த்து ஏமாற்றியவர் மகிழ்ச்சி கொள்வார். அவ்வாறே, இன்னும் சிலரோ தாம் எப்படியாவது மற்றவரின் பொய்யில் ஏமாந்து விடக்கூடாது என்பதற்காக உஷார் நிலையில் இருக்க முயல்வார்கள். உலகம் பூராகவும் மேற்படி ஏப்ரல் முட்டாள்கள் தினம் பிரபல்யத்தைப் பெற்றுள்ளது.




## எவ்வாறு உருவானது?

ஏப்ரல் 1 ஆம் திகதி முட்டாள்கள் தினமாக எவ்வாறு அமைந்தது தெரியுமா? பண்டைய காலத்தில் ரோமானிய மக்களும், இந்துக்களும் ஏப்ரல் 1 ஆம் திகதியையே புதுவருட தினமாகக் கொண்டாடி வந்தனர். இக்காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் நாட்களைக் குறிப்பிடுவதற்கென 'ஜூலியன் கெலண்டர்' எனப்படும் பழங்கால நாட்காட்டி பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த கெலண்டரிலும்கூட ஏப்ரல் 1 ஆம் திகதியே புதுவருடமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

## மாற்றம்

இவ்வாறிருக்கையில், 1582 ஆம் ஆண்டு அப்போதைய பாப்பரசராக இருந்த 13 ஆம் க்ரிகரி அவர்கள்

## நாட்காட்டி மாறியதன் விளைவே இந்த முட்டாள்கள் தினம்

'ஜோர்ஜியன்' என்ற புதிய கெலண்டர் ஒன்றை அறிமுகப்படுத்தினார். இந்தக் கெலண்டரில் ஜூலியன் ஆண்டுக் கணிப்பின் படி, ஜனவரி 1 ஆம் திகதியே புதுவருட நாளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கி ணங்க எல்லோரும் ஜனவரி 1 ஆம் திகதியை புதுவருட தினமாகக் கொண்டாடத் தொடங்கினர். சில நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு இவ்வாறு புதிய கெலண்டர் ஒன்று அறிமுகமாகியிருப்பது தெரிந்திருக்கவில்லை. ஆகையால், அவர்கள் தொடர்ந்தும் பழைய நிலையிலேயே ஏப்ரல் 1 ஆம் திகதியை புதுவருட தினமாகக் கொண்டாடி வந்தனர். இவர்களின் இந்தச் செயலானது, புதிய கெலண்டரைப் பின்பற்றியவர்களு நகைப்புக்கிடமானதாக இருந்தது. விபரம் தெரியாமல் இன்னமும் இவர்கள் ஏப்ரல் 1 ஆம் திகதியை புதுவருடமாகக் கொண்டாடுகின்றனரே என்று அவர்களை முட்டாள்கள் என்று அடையாளப்படுத்தினர். ஆக, ஏப்ரல் 1 ஆம் திகதியை புதுவருட நாள் என்று கருதியவர்கள் முட்டாள்களாக கருதப்பட்டதுடன், அன்றைய தினம் முட்டாள்கள் தினமாகவும் கருதப்பட்டது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 02, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org